தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆவணி 19 (3-9-'60). சனிக்கிழமை | இதழ் 12

செய்திப்பாட்டு

தீர்மானம் செய்து அனுப்பு.

தீர்மானம் செய்தனுப்பு, தோழா—இந்தித்
திணிப்பை மறுத்துத் தில்லி யரசுக்கு உடனே
தீர்மானம் செய்தனுப்பு தோழா.

ஊர்ஊ ராகக் கூட்டங் கூட்டி
ஒருமன தான வாக்குத் திரட்டித்
தீர்மானம் செய்தனுப்பு தோழா.

தென்னகத் திராவிட மக்களின் கருத்துத்
தெரிந்தபின் இந்தியைத் திணித்திட வேண்டாம்
இன்னல்கள் வேண்டாம் எனும்நினைப் பிருந்தால்
இனிமறை வாகவும் திணியா தீரெனத்
தீர்மானம் செய்தனுப்பு தோழா.

உட்டுறை யமைச்சரின் உறுதி மொழிகளும்
உண்மையில் பண்டிதர் உரைத்த மொழிகளும்
திட்டமாய் நிலைக்கவும் ஆங்கில மொழியே
தேசத்துப் பொதுமொழி யாக நிலைக்கவும்
தீர்மானம் செய்தனுப்பு தோழா.

இந்தியத் துணைக்கண்டம் எங்கணும் பொதுவாய்
என்றென்றும் ஆங்கில மொழியே யிருக்க
இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தி
எங்களுக் களித்தவாக் குறுதிகாப் பீரெனத்
தீர்மானம் செய்தனுப்பு தோழா.

தீர்மானம் செய்தனுப்பு தோழா-இந்தித்
திணிப்பை மறுத்து தில்லி யரசுக்கு உடனே
தீர்மானம் செய்தனுப்பு தோழா.

— நாகநாதன்.

குறள் விழாக் கவியரங்கம்

4. திருவள்ளுவர் ஒரு மக்கள் தலைவர்.

கவிஞர் நாவுக்கரசன்.

கண்ணதாசன் முன்னுரை

பாவுக் கரசர் பல்பொருள் வல்லார்
பார்த்தும் கேட்டும் வியக்கும் வண்ணம்
நாவுக் கரசர் நற்றமிழ் பொழிவார்
நல்லோர் உள்ளம் தாங்கித் தெளிக!

தாயே! நான் மறவேன்!

முன்னை முதல்மொழியே மூத்த தமிழ்த்தாயே
அன்னைத் திருநாடே! அன்பிறையே—சின்னவனைப்
பெற்றெடுத்துப் பைந்தமிழ் பேசப் பயிற்றுவித்த
நற்றுயே தாள்மறவேன் நான்.

வள்ளுவன் தாள் வணக்கம்.

உலகம் யாவையும் தம்முள் இருத்திய
விலையில் லாக்குறள் மாமணி ஈந்தவன்
புலமைக் கதிரவன்; புவியக மக்களின்
தலைவன் வள்ளுவன் தாளினை ஏத்துவாம்.

தலைவணங்கா மண்டலத்துத் தலைவ!

தலைவணங்காத் தென்பாண்டி மண்ட லத்தின்
தமிழ்மகனே! கவியரங்கத் தலைவ! தாயின்
நிலையழிக்க வரும்பேரைச் சாய்க்கக் கூடும்
நெடும்படையின் புரட்சியணி இளைஞர் மன்னு!
கலைவிளக்கி நயமுறைக்கும் புலவர் மக்கள்
காவலனே! எனதண்ணு கண்ண தாச!
பலதிசையில் இருந்திங்கே வருகை தந்த
பேரவையீர்! கவிக்குலத்தீர்! வணக்கம் ஏற்பீர்!

வாலில்லா மக்கள் தலைவன்!

மேலாடை பிடித்திழுக்கும் பிள்ளை—தோளின்
மேலேறிக் குந்துகின்ற செல்வம் ஒன்று
நூலுடும் தறிக்கட்டை போலே ஒன்று
நிலைமறக்கும்; துள்ளிவரும். காலைச் சுற்றும்;
வால்இல்லாப் பரம்பரையாம் இந்த மக்கள்
தலைவனென்று எனைநினைத்தால் தப்பாம் இன்னும்
தாலாட்டுப் பாடவில்லை எங்கள் வீட்டில்.
தலைவன்நான் தலைவிக்கு! இதுதான் உண்மை.

அடி, மிஞ்சும்!

பிறப்பாலே நான்தலைவன் என்போன் மன்னன்
பெட்டிகளில் வாக்களிக்கும் அமைப்பை வைத்துப்
பிறப்பிதுதான் குடியாட்சித் தலைமை! இங்கும்
பிழையென்றால் தலையெடுக்கும் கொடுங்கோல் ஆட்சி
அறப்பாதை ஒதுக்கிவிட்டு, அகந்தைப் பேய்க்கு
ஆளான தலைமைக்கு, அடிதான் மிஞ்சும்.
குறைப்பட்ட நெஞ்சங்கள் கூடிக் காணும்
குடிமக்கள் தலைவனெனும் மக்கள் ஆட்சி.

காவியுடை, வெட்டிப் பேச்சு!

தாய்ஈன்ற நாள்முதலாய் அறிவை விட்டுத்
தாம்வாழும் சுற்றத்தின் தரத்தைத் தாழ்த்தி
வாய்அளக்க வானத்தை வட்டம் போட்டு
வாழுகிற காவியுடை ஆட்கள் உண்டு!
தாய்காக்கத் தெம்பில்லை! வெட்டிப் பேச்சு!!
சாவுக்குப் பின்னென்ன இன்பக் கோர்வை!
காய்வெம்பிக் கொட்டுதல்போல் மக்கள் கூடிக்
காற்றடிக்க இத்தலைமை உதிரும்! ஓடும்!!

எதிலோ ஆசை?

பக்கத்தில் பத்துப்பேர்! சுமக்க எட்டுப்
பாமரர்கள்! பல்லக்குப் பவனி! வாயில்
எக்கணமும் முணுமுணுப்பு! எதிலோ ஆசை!
எத்தனையோ இன்பநிலை! துறவி ஆனல்!
மக்களுக்கு நெறிகாட்டாத் தலைவர்! பெற்ற
மண்என்னுர்! மறுவாழ்வின் மகிமை சொல்வார்!
மக்கள்பணிப் பாதிரியார் சைப்ரஸ் நாட்டு
மாத்தலைவன் மகாரயசுத் துறவி வாழ்க.

குறள் விளக்கும் மாத்தலைவன் மகாரியஸ்.

"தந்தைநிலம் சொந்தநிலம் எமக்கு! இங்கே
சுரண்டுதற்கு எவனுக்கு உரிமை! நாட்டின்
மந்தநிலை இனிச்சகியோம்! உறிஞ்சும் கூட்டம்
மாளட்டும்! விடுதலைப்போர் தொடுத்தோம் ஓடு!
இந்தமண்ணை யாம்! ஆள்வோம்! இதுவே எங்கள்
இறைபணியாம்! ஆண்டவனே இதில்தான் என்ற
வெந்தணலாம் மகாரியசு, குறளின் ஆசான்
விளிக்கின்ற மாத்தலைவன்! குவிப்போம் கையை."

சரித்த சரித்திரங்கள்!

உலகத்துப் பலகணியைத் திறந்து வீட்டில்
உட்கார்ந்தால், வரலாறு உணர்த்தக் கூடும்.
தலைவனென ஆக்கிவைத்த மக்கள், சொல்லைத்
துச்சமெனத் துப்பிவிட்டு முரட்டுப் போக்கில்
தலைகனத்துத் திரிந்தவரைச் சரித்த மக்கள்
சரித்திரத்தைப் பார்க்கின்றோம்! நலம்ச. ரைப்போர்
கலகமென்ற கிஷிகவிழ்ந்தார் சப்பான் நாட்டில்!
காங்கோவில் துருக்கியிலும் இதுதான் பாடம்!

தலைவனுக்குத் தலைவன்.

அலைகடலாய்க் கவிமுழக்கும் அரங்க வேந்தன்
அண்ணனெங்கள் கவிக்கோமான் கண்ண தாசன்
தலைவனையான் உறவாடி மகிழ்வேன்-இந்தத்
தலைவர்க்கு தலைவரெனும் அறிஞர் கோமான்
விலைமதியாத் தமிழ்த்தங்கம் இந்த நாட்டு
விடுதலைப்பேர்ப் பெருந்தலைவன்! தமிழ்த்தாய் காக்கும்
மலையரணும் தளபதியாம் தலைவன் போல
மக்களுக்கு மாத்தலைவன் குறளின் ஆசான்!

இந்நாடு பொன்னாடாக!

வழிகாட்டி மக்களிடம் உறவு கொண்ட
வள்ளுவனுர் உலகத்தின் தலைமைச் சொத்து
வழிசொன்னுர்! வகைவகையாய் வாழ்க்கைக் கோணம்
வாய்ப்பதெல்லாம் முடிவினிலே நிறைவின் இன்பம்!
எழில்கொஞ்ச இந்நாடு பொன்கா டாக
எழுதிவைத்த குறளாசான் தலைவன் இட்ட
விழிபெறுவோம்! விசையுறுவோம் வீழ்ச்சி போக்கி!
வென்றிடுவோம் புகழ்பூத்த வாழ்வைக் கொள்வோம்.

ஞாலம் அழியட்டும்!

மழைக்கணத்தை இடிக்கின்ற மலையைப் போல
மக்கள்குரல் எழுப்பிவிட்டு இந்த மண்ணில்
உழைப்பினிலே பொறுப்புண்டு; உழைப்பிற் பெற்ற
ஊதியத்தில் ஊழியரும் பங்கு கேட்டால்
இழைக்கின்றுர்! இக்கொடுமை கேட்டு, மக்கள்
இரந்துண்டு வாழ்வதெனில் இந்த ஞாலம்
அழியட்டும் எனச்சொன்னுன் குறளின் ஆசான்
அருந்தலைவன் பாட்டாளி மக்கள் செம்மல்!

உலகத்துக்கே தலைவன்!

கொள்வதையும் சரிபார்த்துத் தமதாய்ப் பேணிக்
கொடுப்பதையும் சமன்கோலின் நுனிபோல் தந்து
எள்முனையும் அறம்பிறழா வணிகர், நெஞ்சில்
இடம்கொண்ட வள்ளுவனே தலைவன்! தீமை
தள்ளிவிட்டு நல்வழியைச் சாற்றும் நூலார்
சான்றோர்க்கும் குறளாசான் தலைவன்! மக்கள்
உள்ளுள்ளே நெறிபாடிக் காப்ப தாலே
உலகத்து மக்களுக்கே தலைவன் கேளீர்!

மொழியாத பொருளில்லை,

எப்பொருளை யார்யார்வாய்க் கேட்பின் அந்த
உட்பொருளே உணர்கவென்ற குறளின் ஆசான்
இப்புவியில் மொழியாத பொருளே இல்லை!
எதுதொடினும் சிறக்காமல் இருப்ப தில்லை.
செப்பரிய கணக்காயன் அறிஞன்! செம்மல்
தென்னகத்து மக்களுக்கே தலைவன் எங்கள்
மெய்ப்புலவன் வள்ளுவனுர் கழகம் காப்பீர்!
முத்தமிழால் நாம்வாழ்வோம் வணக்கம்! நன்றி'

பின்னுரை,

மக்களுக்குத் தலைவனென ஆக வில்லை
மனையாளின் தலைவன்நான் என்றுர் தோழர்
தக்கதொரு காலத்தில் மக்கட் பேறு
சரந் தொடுத்த வேகத்தில் புறப்ப டட்டும்
கொக்கொக்கக் கூம்புங்கால் காத்திருந்து
குத்தொக்கப் பிள்ளையினை எடுத்த ணைப்பீர்
பக்கத்தில் துணையிருக்கப் பிள்ளை ஆடிப்
பழகுவதைப் பார்த்தபடி தமிழ் வளர்க்க!

எண்ணம். மலர் 7 3-9-60 இதழ் 12

பதினெட்டுப் பிணங்கள்



பதினெட்டுப் பிணங்கள் கரையிலே ஒதுங்கின.
பதினைந்து பிணங்கள் கடலிலே மூழ்கின,
தப்பிப் பிழைத்தவர்கள் மூன்று பேர்.
அவர்களில் தரகரும் ஒருவர்.
செய்தி பத்திரிகைகளில் பரபரப்போடு வந்தது.
படித்தவர்களில் இறந்தவர்களின் உறவினர்கள் மட்டுமா கலங்கினார்கள் ?
தமிழுள்ளம் கொண்ட அனைவருமே துடித்தார்கள்.
ஏன் செத்தார்கள் ?
எதற்காகச் செத்தார்கள் ?
களங்காணச் சென்று வீரமரணம் அடைந்தார்களா ?
கப்பல் நிறையச் சரக்கேற்றிக்கொண்டு வாணிபம் புரியப் போனார்களா ?
பெரும்பணம் போட்டு நடத்தும் தொழிலின் விபரம் அறியச் சென்றார்களா ?
அவர்கள் தமிழர்கள் ! அவ்வளவு வளமான வாழ்வு அவர்களுக்கு ஏது ?
வயிற்றுப் பிழைப்புக்குக் கள்ளத்தோணி ஏறினார்கள்.
தாய்வீட்டிலே தான் சோற்றுக்கு வழி இல்லை.

இலங்கைக்குச் சென்றால் ஒருவேளை சோறாவது ஒழுங்காகக் கிடைக்கும் என்று இரவோடு இரவாகப் பயணம் போனார்கள்.

மனைவி கரையிலே ! மணவாளன் கடலிலே !
அன்னை கரையிலே ! பிள்ளை கள்ளத்தோணியிலே !
குழந்தைகள் கரையிலே ! தந்தை இருள்சூழ்ந்த கடலிலே !!
எப்படியும் பிழைப்பார்கள் !

எப்போதாவது திரும்பிவிடுவார்கள் ! என்ற கடைசி ஆசையோடுதான் கரையிலிருந்தவர்கள் அமைதி கொண்டிருந்தார்கள்.

நள்ளிரவு !
கடலின் இரைச்சல் !
வேறு ஓசைகளில்லாத சூழ்நிலை !
படகு தவழ்ந்தது—கடலில் நடந்தது !
முப்பத்தாறு குரலில் ஒரு குரலும் எழவில்லை !

இருதயத்தைக் கையில் பிடித்துக்கொண்டு மாரி, மகமாயி, மலையரசி, காட்டேரி என்று தெய்வங்களைத் துணைக்கழைத்தபடி விம்மிய இதயத்தோடு அவர்கள் அமர்ந்திருந்தார்கள். போயிறங்கும்போது போலிசார் பிடித்துவிட்டால்.

…………!

அந்தக் கவலைதான் அவர்களுக்கு இருந்தது. போயிறங்கியதும் பிணமாவோம் என்று யார் நினைத்திருப்பார்கள் ?

காய்ந்து கருகிப்போன தாயகத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டோம் கண்ணிறைந்த காட்சியும் வளம்நிறைந்த வாழ்வும் தரும் இலங்கையில் எப்படியாவது இறங்கிவிட்டால், எவ்வளவோ தமிழர்கள் அங்கு இருக்கிறார்கள். அவர்கள் நம்மைக் காட்டிக்கொடுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. தரகன் தைரியம் கொடுத்தான்,

பிறந்த நாட்டில் அன்றாடம் சோற்றுக்குச் சாவதைவிட, கள்ளத்தோணிப் பயணமும் கண்மறைந்த வாழ்க்கையும் எவ்வளவோ மேல் என்றுதான் அவர்களும் நம்பினார்கள்.

மேலே கண்ணுக்கு எட்டிய மட்டிலும் வானம் ! கீழே கண்படு தூரம் முற்றும் கடல் ! இடையிலே அவர்கள் படகு ஊர்ந்தது !…,.ஊர்ந்தது ! ஆசையும் குடும்ப பாசமும் பின்னால் இழுக்க - பசியும் பாழ்பட்டுப்போன வாழ்வும் முன்னால் தள்ள பழம் பெரிய நாட்டின் மக்கள் மிதந்துகொண்டிருந்தார்கள்.

சரித்திரத்தில் நேர்வழியைக் கண்ட பரம்பரை சமுத்திரத்தில் கள்ளவழியில் பயணம் சென்றது !

இலங்கைக் கரைக்கு ஒரு மைல் தூரத்திலேயே படகு நிறுத்தப்பட்டது.

‘இறங்குங்கள், கடலில் நடந்துபோங்கள், என்ற உத்தரவு பிறந்தது.

கள்ளத்தோணிப் பயணங்களில் அதுதான் வழக்கமாம்.

‘ஒரு மைல் தூரமும் கடல் ஆழமில்லாமல் இருக்குமா ?’ ஓர் உயிர் துடிப்போடு கேட்டது.

‘இடுப்புவரைதான் தண்ணீர்’ பதில் இப்படி வந்தது.

கரை கண்ணுக்குத் தொயவில்லை-பொழுதும் சரியாக விடியவில்லை.

மீன் கடிக்குமோ ? முதலை கவ்வுமோ ? எடுத்துவைத்த அடியைப்போல் அடுத்த அடியும் நிற்குமோ ? பள்ளம் கிடக்குமோ ? பாதாளம் கவருமோ வெள்ளம்போல் அலை திரண்டு வீழ்த்திவிட்டுப் போகுமோ ?

வாயடைத்துக் கண்கலங்கி வழிதேடி வழிதேடி பாதிவரை நடந்தார்கள் அவர்கள் ! பயம் தெளியவில்லை ! வளர்ந்தது !

கடலின் உட்புறத்தில் நடப்பதுபோல் கடலின் ஆழம் அதிகமாகிக்கொண்டு வந்தது.

‘ஓ’ என்று கதறினான் புதிதாக மணமுடித்த இளைஞன்.

‘கடவுளே’ எங்களைக் காப்பாற்றமாட்டாயா’ கண்ணீர் வடித்தான் மற்றொருவன்.

‘ஏன் புறப்பட்டோம், பசியிலேயே செத்திருக்கலாம் ?’ இப்படி அழுதான் வேறொருவன்.

பக்கம் பக்கமாகவே அவர்கள் நடந்துகொண்டிருந்தார்கள்.

இன்னும் என்ன உங்களுக்கு வாழ்வு ? என்பதுபோல் அலைகள் திரண்டன. முப்பத்தியறுவரும் அதிலே மூழ்கினர், ஒருவரை ஒருவர் அழைக்கவும் சக்தியற்று உருண்டனர்.

பொழுது விடிந்தது !
மூன்று உயிர்கள் கரையில் நின்றன !
பதினெட்டுப் பிணங்கள் கரையில் ஒதுங்கின !
பதினைந்து பேரின் கதி இன்னும் ஆராய்ச்சி செய்யப்படுகிறது !

செய்தி கேட்டாள் செத்துப்போன இளைஞன் ஒருவனின் மனைவி, தற்கொலை செய்துகொண்டாள்.

பிணங்கள்கூடத் தாய்த் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வரவில்லை.

பதினைந்துபேர் கடலின் வயிற்றிலேயே கிடக்கிறார்களோ ? அவர்களை மீன்கள் தின்றனவோ ! முதலைகள் தின்றனவோ ? யாருக்குத் தெரியும்.

இந்திய அரசாங்கம் அவர்களைச் சிந்தையிலே கொள்ளவில்லை ! சென்னை அரசுக்குக் கண்ணீர் வடிக்கவும் மனமில்லை !

ஏ, சுதந்திர வீரர்களே ! பாரத புத்திரர்களே ! உங்கள் காதுகளைக் கொஞ்சம் திருப்புங்கள். வயிற்றுப் பிழைப்புக்குக் கள்ளத்தோணி ஏறிய வரலாறு உலகில் வேறு எங்கும் உண்டா ?

இருண்ட கண்டம் ஆப்பிரிக்காவில் இந்தச் செய்தி உண்டா ? ஐரோப்பாவின் நோயாளி என்றழைக்கப்பட்ட காலத்திலாவது துருக்கியில் இந்தச் செய்தி உண்டா ? சீனநாட்டு மக்களுக்கு இந்த அனுபவம் உண்டா ? சின்னஞ்சிறிய இலங்கைவாசிகள் எவராவது இப்படிச் செத்தது உண்டா ? குண்டுமணிக் கூட்டங்கள்போல் குவிந்து கிடக்கும் மால்தீவு வாசிகளுக்காவது இந்த அனுபவம் உண்டா ?

மாபெரிய பாரதத்தின் மன்னர்களே ! தெரிந்திருந்தால் சொல்லுங்கள்.

காரணத்தைச் சொன்னால் கோபம் வருகிறது. கற்களையும் சொற்களையும் வீசத் தெரிகிறது. பிறந்த நாட்டு மக்களுக்கு ஒருவேளை சோறு ஒழுங்காகப் போடக்கூடிய அரசு இன்னும் அமையவில்லை.

செக்குமாடுகள்போல் பதவியைச் சுற்றிச் சுற்றிவரும் அமைச்சர்களே ! இன்னும் எத்தனைபேரை இப்படிப் பலி கொடுக்கப்போகிறீர்கள் ? பாழ்பட்டுப் போன கிராமங்களை எப்போது வாழவைக்கப் போகிறீர்கள் ? வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த உல்லாச வாழ்வைத் தகர்த்தெறிந்து விட்டதே சுதந்திரம் ! சுதந்திரவீரர்கள் என்கிற பேரில் எருமைகள் அல்லவா நாடு என்ற குளத்தில் இறங்கியிருக்கின்றன.

என்ன வழி இதற்கு ? எப்போது தீரும் இந்தக் கொடுமை ?

மாறி மாறிச் சிந்தித்தாலும் கிடைப்பது ஒரே முடிவுதான் !

எங்கே தனியாட்சி அமைகிறதோ அங்கே பசி இல்லை. எங்கே சூடு சுரணை உள்ளவன் அமைச்சனாக இருக்கிறானோ அங்கே ஏக்கம் இல்லை. எங்கே இனத்துக்கு ஒரு தனியரசு எழிலோடு அமைகிறதோ அங்கே துயரம் இல்லை.

தினமும் காண்கிறோம் உலகத்து வரலாற்றை ! பசியற்ற வாழ்விற்குத் தனிநாடு அமைக்கிறது உலகம்.

இங்கேயோ அந்தோ ! பரிதாபம் ! முட்டாள்களும் அயோக்யர்களும் பதவியில் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறார்கள். செத்துப்போன தமிழர்களுக்காக அவர்கள் இன்னும் ஒரு வார்த்தை பேசவில்லை. அவர்கள் தோல் மரத்துப் போய்விட்டது. அவர்கள் இரத்தம் சாக்கடையாகிவிட்டது. அவர்கள் நரம்புகளை நாய்களின் அடிமைப்புத்தி கவ்விக்கொண்டிருக்கிறது. அவர்களது உள்ளங்கள் அவர்களது குடும்பங்களுக்காக மட்டுமே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தமிழன் இப்படியே இருந்தால் அனாதைப் பிணமாகவேதான் மிதப்பான் ! வங்காளத்துக்காரன் அவதிப்பட்டான் என்றவுடனேயே ‘வங்காளிகள் சுதந்திரதினம் கொண்டாடமாட்டார்கள்’ என்று வங்காள கவர்னரே அறிவித்தார்.

தானாடாவிட்டாலும் தன் சதையாடும்; இங்கே ஒப்புக்காகக்கூட ஒரு தலையாடவில்லை !

திராவிட மக்களே ! இதோ கண்ணுக்குத் தெரிந்த பதினெட்டுப் பிணங்கள் தங்கள் கதையை உங்களுக்குச் சொல்லிவிட்டுப் போய்விட்டன.

என்ன செய்யப்போகிறீர்கள் ?

எப்போது செய்யப்போகிறீர்கள் ?

வாருங்கள் ஒரு முடிவுக்கு - பசியால் மடிவதைவிட, கள்ளத்தோணி ஏறி கடலில் மடிவதைவிட, கயவர்களின் அதிகாரங்களை முறித்துக் கட்டியிருக்கும் விலங்குகளை ஒடித்து-அடிமைப்படுத்தும் சட்டங்களைத் தகர்த்து வருங்காலத் தலைமுறைக்கோர் வழி வகுப்போம். வாருங்கள். இல்லையென்றால் பதினெட்டு நூற்றிஎண்பதாகும் ! இந்தச் சமுதாயம் முழுவதுமே அனாதையாக மிதக்கும், நாம் அந்தத் துயரத்திற்கு ஆளாக வேண்டாம் புறப்படுவோம், பகையைக் கிழித்தெறிவோம். எவை நமக்கு அந்தச் சக்தியைக் கொடுக்க வல்லது ? இதோ பாருங்கள்-பதினெட்டுப் பிணங்கள். ஆம் பதினெட்டுப் பிணங்கள் !

கண்ணதாசன்

செய்திச் சுழல்

சீன ஏகாதிபத்தியம்

ஒரு காலத்தில் ஹிட்லர் உலகமுழுவதையும் அல்லாவிட்டாலும் ஐரோப்பா முழுவதையும் தன் ஆதிக்கத்திற்குட் படுத்த வேண்டும் என்று கனவு கண்டான். அதே காலத்தில் அவனுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஜப்பான் ஆசியாக் கண்டம் முழுவதையும் வளைத்துத் தன் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட வேண்டும் எனக் கனவு கண்டது. மேற்படியார்களின் நாடுகள் இரண்டும் இன்று இருக்கின்ற நிலைமை உலகத்திற்கு நல்ல படிப்பினை ஆகும். தகாத ஆசை கொண்டவர்கள் தலைகீழாக வீழ்வார்கள் என்பதற்கு ஜெர்மனியும் ஜப்பானும் இன்று தகுந்த எடுத்துக்காட்டுகளாய் இருக்கின்றன. சீனக்காரர்கள் இந்தப் படிப்பினையைக் கற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இன்று, ஆசியாக்கண்டம் முழுவதையும் ஆக்கிரமித்து ஒரு பெரிய சீன ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் கனவு காண்கிறார்கள். கனவு காண்பதோடு நில்லாமல், தங்கள் ஆட்சியின் எல்லைப் பரப்பை விரிவுபடுத்துவதில் தீவிரமாக முனைந்து வேலை செய்தும் வருகிறார்கள்.

மலேயாவிலுள்ள மொத்த மக்கள் தொகையில் பாதிக்குமேல் சீனக்காரர்கள்! பர்மாவிலே இலட்சக் கணக்கிலே குடியேறியுள்ள அன்னியர்களிலே மிகப் பெரும்பான்மையான எண்ணிக்கை படைத்தவர்கள் சீனக்காரர்கள்! இது போக நாள்தோறும் கள்ளத்தனமாக வேறு குடியேறி வருகிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே பதினையாயிரம் பேருக்குமேல் சீனக்காரர்கள் இருக்கிறார்கள். இவ்வாறு ஆசியாக் கண்டம் முழுவதும் சீனக்காரர்கள் பரவியிருக்கிறார்கள். இது போதாதென்று திபேத்தைப் பிடித்து வைத்துக்கொண்டிருப்பதோடு நில்லாமல், பிறநாட்டு எல்லைப் பகுதிகளுக்குள்ளே வேறு புகுந்து பரவி அந்தப் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன சீனப்படைகள்.

திடுக்கிடத்தக்க செய்தியொன்றை இரண்டு வாரங்களுக்குமுன் டெல்லி சட்ட சபையில் உள்நாட்டு அமைச்சர் பந்த் கூறியிருக்கிறார்.

இந்திய ராணுவ இரகசியங்களை உளவு பார்த்த இருபது சீனக்காரர்களை இங்கிருந்து போலீசார் நாடு கடத்தியிருக்கிறார்களாம், இவர்களில் இரண்டு பேர் கல்கத்தாவில் உள்ள சீன பாங்கியின் பெரிய அதிகாரிகளாம்.

கண்ணுக்குத் தென்பட்டவர்கள் இந்த இருபது சீனக்காரர்கள். இன்னும் கண்ணுக்குத் தட்டுப்படாமல், பல் வைத்தியர்களாகவும், கடைக்காரர்களாவும் பாங்கி யதிகாரிகளாகவும் எத்தனை சீனக்காரர்கள் இருக்கிறார்களோ?

சீனக்காரர்களின் இந்த அக்கிரம ஆக்கிரமிப்புக்குக் கடைசியில் அவர்கள் தகுந்த பலனை அனுபவிக்காமல் போகமாட்டார்கள்! ஆனாலும் இந்த இந்தியத் துணைக்கண்டத்தை யாளுபவர்கள், சீனக்காரனைத் தடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையென்பதுமட்டும் உண்மை. இந்த நிலையில்– கையாலாகாத இந்தப் பெருந் தலைகள் ஏக இந்தியாக் கொள்கைகளைப் பேசுவது தான் வியப்பாயிருக்கிறது. ஏக இந்தியாவாக இருந்து இவர்கள் அவன் ஆக்கிரமிப்பைத் தடுக்க என்ன செய்துவிட்டார்கள். இப்படியே பேசாமல் இருந்தார்களானால், நாடு என்ன கதியாவது? இந்தத் துணைக் கண்டத்து மக்கள் எத்தனை நாளைக்கு இவர்களை நம்பிக்கொண்டு இருக்க முடியும்?

ஈவிரக்கமற்ற இலங்கை அதிகாரிகள்

இந்தியக் குடிமகன் ஒருவன் சிங்களப் பெண் அல்லது இலங்கைக் குடியுரிமை பெற்ற பெண்ணை மணம் புரிந்து கொண்டால், அந்த இந்தியனும் இலங்கைக் குடியுரிமை பெறலாம்—பெற அதிகாரிகள் அனுமதிக்கலாம் என்று இலங்கைக்குடியுரிமைச் சட்டம் கூறுகிறது.

ஓர் இந்தியர் இருபத்தி மூன்று ஆண்டுகளாக இலங்கையில் வாழ்பவர். அவர் திருமதி ஏ. ஜீ. மங்கோ என்ற சிங்களப் பெண் ஒருத்தியை மணம் புரிந்து கொண்டார். இப்போது அவர்களுக்கு இரண்டு குழந்தைகளும் இருக்கின்றன.

ஈவிரக்கமற்ற இலங்கை அதிகாரிகள் இப்போது, அந்த இந்தியக்குடிமகனுக்குக் குடியுரிமை வழங்க மறுத்து அவரை இந்தியாவுக்கு நாடு கடத்த உத்தரவு பிறப்பித்துள்ளார்களாம். அவர் எவ்விதமான குற்றமும் புரியாத பண்புள்ள ஒரு மனிதராக இருந்தும், இப்படி இரக்கமற்ற கட்டளை பிறப்பித்து அந்தக்கணவனையும் மனைவியையும் பிரித்து விட முடிவு கட்டிவிட்டார்கள் அதிகாரிகள். அவர்கள் செயல் எப்படியிருக்கிற தென்றால், தனக்கு இரண்டு கண் போனாலும் எதிரிக்கு ஒரு கண்ணாவது கெட வேண்டும் என்று நினைத்த மூடன் கதைப் போலத் தானிருக்கிறது இந்தியர் மீதுள்ள வெறுப்புக் காரணமாகத் தங்கள் இனத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியனுபவிக்கக் கூடிய துயரத்தைக் கூட உணர முடியவில்லை அவர்களால். ஒரு சிங்களப் பெண்ணுக்கே கொடுமைபுரியும் இவர்கள் இந்தியர்கள் என்ற பெயரில் அங்கு வாழும் தமிழர்களை எப்பாடு படுத்துவார்கள்-படுத்திவருகிறார்கள் என்று நினைத்துப்பார்க்கக் கூட முடியவில்லை.

பர்மாத் தமிழர்களும் பண்டிதர் அலட்சியமும்

பர்மாவிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்ட இந்தியர்களின் மறுவாழ்வுக்கு இந்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று மக்கள் சபையில் திரு இராமநாதன் செட்டியார் கேட்ட கேள்விக்குப் பண்டிதர் நேரு இவ்வாறு பதிலளித்தாராம்.

"அவர்கள் மறுவாழ்வுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை"

எவ்வளவு கருணையுள்ள பதில்! பர்மாவில் வாழ்கின்ற இந்தியர்கள் ஆண்டுதோறும் தலைக்குநூறு ரூபாய் பதிவுக் கட்டணம் கட்டிவர வேண்டியிருக்கிறது. இப்போது குடியுரிமை பெற்றவர்கள் அந்தச் சீட்டுப் பெற ஐம்பது ரூபாய் கட்டவேண்டுமாம். இது பற்றிக் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த நேரு, இந்தக் கட்டணம் எல்லா அன்னியர்களுக்கும்தான் விதிக்கப் பட்டிருக்கிறது என்று கூறினாராம்.

பர்மாவில் வாழும் அன்னிய நாட்டினரில் இந்தியர்கள் தாம் அதிகம். அந்த இந்தியர்களிலும் முக்கால்வாசி தமிழர்கள்தாம். நேருவின் அலட்சியப் போக்குக்கு இதுதான் காரணம். பர்மாவிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப் படுகின்ற இந்தியர்கள் பெரும்பாலும் குற்றவாளிகளாக இருந்தால் நேருவின் அலட்சியப் பான்மை பொருத்தமானதென்று சொல்லலாம். ஆனால், நடப்பு அப்படி யல்ல, அதிகாரிகளின் கேள்விக்குத் தகுந்த பதில்சொல்லத் தெரியாதவர்கள் எல்லாம் கட்டாயமாக வெளியேற்ற படுகிறார்கள் அவர்கள் வாழ்வில் இந்திய அரசாங்கத்துக்கு அக்கரையில்லை யென்று நேரு கூறிவிட்டார். தமிழர்கள் இந்திய அரசை இனியும் நம்பியிருக்க முடியுமா?

ஐயோ! வளமில்லா இந்தியே!

இந்திய அரசின் கல்வி அமைச்சர் அலுவலகத்தில் 1960 ஜுலை மாதம் வரை 2,19,723 கலைச் சொற்களை இந்தியில் உருவாக்கியுள்ளார்களாம். இதில் 29,145 கலைச் சொற்கள் சரியில்லை என்று வல்லுநர் குழு தள்ளி விட்டதாம். கல்வித் துறையிலேயே வழக்கத்தில் கொண்டு வருவதற்கு இன்னும் சுமார் 1500 கலைச் சொற்கள் உருவாக்க வேண்டியிருக்கிறதாம். இதற்காக இந்தி மொழி வல்லுநர் குழு மண்டையை யுடைத்துக்கொண்டு வேலை செய்து வருகிறதாம். ஐயோ! ஏனிந்தக் கஷ்டம்! நீங்கள் எவ்வளவுதான் மண்டை யுடைத்துக்கொண்டாலும் ஒன்றுமில்லாத இந்த இந்தியை உருவாக்கி இயக்குவதுமுடியாத காரியம். இந்திய அரசும் இந்த வீண் வேலைக்கு ஏன் இப்படி வெட்டிச் செலவு செய்ய வேண்டும்? இந்தி வெறியர்களைத் திருப்திப்படுத்தப் பொதுப் பணத்தை வீணாக்குவதா? இன்றே இந்தக் கலைச் சொல் உருவாக்கும் வேலையைக் கைவிட்டு விட்டால் இந்த நேரத்தையும் பணத்தையும் பயன்படுத்தி நாட்டுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்யலாமே!

அமெரிக்காவிலிருந்து மாட்டுவண்டிச் சக்கரங்கள்

அமெரிக்காவில் தயாரிக்கப்படுகிற வண்டிச் சக்கர அமைப்புகள் இந்தியாவில் மாட்டு வண்டிகளில் உபயோகிப்பதற்கு ஏற்றவையா என்பதை பரீட்சித்துப் பார்த்துத் தீர்மானிப்பதற்காக, உபயோகிக்கப் பட்ட சக்கர அமைப்புகள் சிலவற்றை மாதிரிக்காக அமெரிக்காவிலிருந்து வரவழைக்க ஏற்பாடாகியிருக்கிறது என்று, போக்குவரத்து- செய்தித் தொடர்பு இலாகா அமைச்சர் திரு ராஜ்பகதூர் ஆகஸ்டு 26-ம் நாள் மக்கள் சபையில் ஒரு கேள்விக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இவை இங்கு வந்து பரிசோதித்துப் பார்க்கப்பட்ட பிறகே, அந்நாட்டிலிருந்து 10 000 வண்டிச் சக்கர அமைப்புகள் இறக்குமதி செய்வது பற்றித் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எவ்வளவு முக்கியமான பொருளை இந்திய அரசாங்கத்தார் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப் போகிறார்கள், பார்த்தீர்களா? இவர்கள் மூளையே படு மூளைதான்! இவர்கள் கையில் இந்தத் துணைக்கண்ட ஆட்சி சிக்கிக்கொண்டிருக்கிறதே!

★

நக்கீரர் கழகக் கவிஞர் சுற்றுலா.

[மேலே] திருவாலங் காட்டில் டாக்டர் மா. இராசமாணிக்கனுர் பேராசியர் ந. சஞ்சீவி, [கீழே] திருப்பாசூரில் சென்னை மாநகராட்சி மன்றத் துணையாணையாளர் என். சங்கரன் தலைமையில் கவியரங்கம்.

ஏது தேசீய மொழி?

தேசிய மொழி என்ருல் அது இயற்கையாகக் கற்பதாக இருக்கவேண்டும். ஒரு நாட்டிலே அந்த நாட்டைச் சேர்ந்தவர்களுக்குத் தாய்மொழியாக இருக்கும் மொழியே அந்த நாட்டிலே பிழைக்க வந்தவர்களுக்குத் தேசீய மொழியாகவும் இருக்கும். இதுதான் தேசீய மொழியின் உலக இயற்கைத் தத்துவம். ஆனுல், ஏகஇந்தியக்காரர்கள், இந்தத் துணைக்கண்டப் பரப்பில் உள்ள நாடுகள் அத்தனைக்கும் ஒரு தேசீய மொழி வேண்டும் என்று புதிதாகவும் கட்டாயமாகவும் ஒன்றைத் திணிக்க முயலுகிருர்களே, அவர்களின், சூழ்ச்சியையும் ஏமாற்றுவித்தையையும் அம்பலப்படுத்துகிறது இந்தக் கட்டுரை:—

இயல்பாக இன்றியமையாது, கற்பது.

உலகில் பிறந்த எவருக்கும் பெற்ற தாய் ஒருத்தி இருப்பாள். பிறந்து வளர்ந்த பிறகு ஏற்படுத்தக்கூடியவள் அல்ல பெற்ற தாய்!

மனைவி - பின்னுல் விருப்பம்போல் ஏற்பாடு செய்யப்பட்டவள். பெற்ற தாய் அப்படியல்ல!

தேசீய மொழியும் அப்படித்தான்! தேசீய மொழி - பின்னுல் ஏற்படுத்தக்கூடிய ஒன்றல்ல!

இந்த சாதாரண உண்மைகூட இந்தியத் துணைக் கண்டத்து 'மேதைகள்' பலருக்குத் தெரியவில்லை.

ஒரு நாட்டின் தேசீய மொழி, இரண்டு பெயருடன் நிலவுவது இயற்கை. ஒன்று 'தாய்மொழி'. இன்னென்று 'தேசீய மொழி'. இந்த இரண்டு பெயர்களும் ஒரே மொழிக்கு ஏற்பட்டு வழங்கப்படும்.

பெரும்பான்மையோர்க்குத் தாய் மொழியாகவும் சிறுபான்மையோர்க்குத் தேசீய மொழியாகவும் இருப்பதையே நிலைமைக்கேற்றபடி, சிறுபான்மையர் தேசீய மொழி என்பார்கள், பெரும்பான்மையோர் தாய் மொழி என்பார்கள்.

ஆனுல், தேசீய மொழி என்பது கட்டாயப்படுத்தி கற்றுக் கொள்ளச் செய்வதல்ல. இயல்பாகவே - தாய் மொழி போலவே - இன்றியமையாமல் கற்பது எதுவோ, அதுவே தேசீய மொழி!

அப்படி கற்றுக்கொள்வதும் பள்ளிக்கூடத்தில் அல்ல. திண்ணையிலே, தெருவிலே, கடை வீதியிலே, நான்கு பேர் கூடுமிடங்களிலே எல்லாம் பேசித் தீரவேண்டிய அவசியமாக இருப்பது எதுவோ, அதுவே தேசீய மொழி.

ஒலி வடிவத்தைப் பயில்வது.

பள்ளிக்கூடத்திற்கு போயிராத முழுமூடனும் ஒலி வடிவத்தில் அறிந்து பேசுகின்ற மொழி எதுவோ அதுவே தேசீய மொழி.

எந்த மொழிக்கும் இரண்டுவித வடிவம் உண்டு. ஒன்று, ஒலிவடிவம். இன்னென்று வரிவடிவம். ஒலிவடிவம் வாயால் வழங்கப்படுவதும், வரிவடிவம் எழுத்தால் வழங்கப்படுவதுமாகும்.

அதாவது, பேச்சாக வெளி வருவதை மொழியின் ஒலிவடிவம் என்றும், எழுத்தாக வெளி வருவதை மொழியின் வரிவடிவம் என்றும் அறிஞர்கள் சொல்வார்கள்.

ஒரு நாட்டின் தேசீய மொழி என்பது, அந்த நாட்டு மக்களில், கற்றவர்கள், கல்லாதவர்கள் ஆகிய இரண்டு பிரிவினரும், பேச்சு வழக்கில்- ஒலிவடிவத்தை - நன்கறிந்து பயில்வதாகும்.

தமிழ் தெரியாமல் தமிழகத்தில் வாழமுடியாது.

உதாரணமாக:—தமிழகத்தில், தமிழர்களுடன் வடுகு, கன்னட, மலையாள மக்களும் வாழ்கிருர்கள்.

அவர்களின் தாய் மொழி தமிழல்ல - வடுகோ, கன்னடமோ, மலையாளமோ ஏதோ ஒன்று அவர்களுடைய தாய் மொழி.

ஆனுல், அவர்கள் தமிழ் பேசத் தெரியாமல் தமிழகத்தில் வாழ முடியாது.

எனவே, தமிழகத்தில் வாழும் வடுகு கன்னட மலையாள மக்கள், குழந்தைப் பருவத்திலேயே, தமிழையும் பேசப் பழகுகிருர்கள் - பழகித் தீர வேண்டும்.

அப்படிப் பேசப் பழகியவர்கள் எல்லாரும், எழுதவும் தெரிந்திருக்க முடியாது. ஆனுல், பேசப் பழகாமல் இருக்கவே முடியாது.

அப்படி, இன்றியமையாத காரணத்தால், இயற்கையாகவே, ஒலிவடிவத்தையாவது கற்றுத் தீரவேண்டிய மொழியைத்தான் அந்த நாட்டின் தேசீய மொழி என்று சொல்வது வழக்கம்,

இதன்படி, தமிழனுக்குத் தமிழ் தாய் மொழியாகவும், தமிழனல்லாத வடுகு கன்னட மலையாளத்தானுக்குத் தமிழ், தேசீய மொழியாகவும் கருதப்படும்.

இதுபோலவே, மலையாளத்தில் வாழும் தமிழனுக்கு மலையாளம் தேசீய மொழி. கன்னடத்தில் வாழும் தமிழனுக்குக் கன்னடம் தேசீய மொழி. வட இந்தியாவில் வாழும் தமிழனுக்கு இந்தி அல்லது அந்தந்தப் பகுதி மொழி ஒன்று தேசீய மொழியாகும்.

இதனுல்தான், தேசீய மொழி என்பது தாய்மொழி போலவே இயற்கையாகக் கற்பதென்று மேலே கூறினேம்.

இந்தியில்லாமல் வாழ முடியாதா?

கல்விச்சாலைகளில், வரி, ஒலி, ஆகிய இரண்டு வடிவங்களையும், சேர்த்து, ஒரே நேரத்தில் கற்றுக்கொள்ளும் மொழி எதுவாக இருந்தாலும், அது, தேசீய மொழி அல்ல—அந்நிய மொழியே!

உண்மை நிலை இப்படி இருக்க, இந்திமொழியை, இந்தியாவின் தேசீய மொழி என்று கதைகட்டுவது ஏன்?

மிக்க நல்லவர்கள் - சிறந்தவர்கள் - உண்மை பேசும் உத்தமர்கள் என்றெல்லாம் பேரெடுத்த பல பெரியவர்கள் இந்தியைத் தேசீய மொழி என்று சொல்லி, பித்தலாட்டம் செய்கிருர்களே ஏன்?

இந்தியை ஒலிவடிவம் அளவிற்காவது எல்லாரும் தெரிந்திருக்கிருர்கள் என்று யாராவது சொல்ல முடியுமா?

இந்தியில்லாமல் வாழ்ந்ததில்லையா? வாழ்கிறதில்லையா? இனி வாழவே முடியாதா?

இந்தி தேசீய மொழியாக இருந்தால் அதனைக் கற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துவானேன்?

தமிழ் நாட்டில் வாழும் கன்னட வடுக மலையாள மக்கள், கட்டாயப்படுத்தப்பட்டா. தமிழைப் படிக்கிருர்கள்? பேசுகிருர்கள்? எழுதுகிருர்கள்? இல்லை! இல்லவே இல்லை!

அரசியல் அப்பாவிகள் பலர்.

இந்தி, திராவிடத்திற்கு அந்நிய மொழி—ஆதிக்கக்காரர்கள் மொழி—கற்கும்படி கட்டாயப்படுத்துகிருர்கள்!

அப்படிக் கட்டாயப்படுத்துகிற அவர்கள், இந்தியைத் தேசீய மொழி என்றல்லவா மனதறிந்த பொய் பேசுகிருர்கள்! அது ஏன்? அதுதான், உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவும் வழி!

இந்தியா என்பது, உண்மையில் ஒரு துணைக்கண்டம்.

ஆனுல், இத்துணைக் கண்டத்து மக்களில் மிகப் பலர் அரசியல் அப்பாவிகள்!

இந்த அப்பாவிகளை ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருப்பவர்கள், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், அந்நியர்கள் - சிறுபான்மையினருங்கூட!

இந்தச் சிறுபான்மையினர், தூங்குகிறவன் துடையில் கயிறு திரிப்பது போல, தக்க சமயத்தில் ஆதிக்க பீடத்தைப் பிடித்துக் கொண்டதுடன், உலகத்திற்கெல்லாம் "இந்தியா ஒரே நாடு" தான் என்று பறைசாற்றினர்கள்!

அப்படிப் பறைசாற்றினல் தானே, இவர்களின் ஏகாதிபத்திய ஆட்சிமுறை வெளிக்குத் தெரியாமல் இருக்க முடியும்!

அயலான் மனைவியை வீட்டில் வைத்துக்கொண்டிருப்பவன், கேட்பவர்களுக்குத் தன் மனைவி என்றே சொல்லிவிட்டால் தொல்லை இல்லையல்லவா?

ஏகாதிபத்தியப் புலிகளுக்கு ஏற்ற பசுத்தோல்

இந்தியைத் தேசீய மொழி என்று சொல்லிவிட்டால், உலகில் உள்ளவர்கள் இந்திய ஏகாதிபத்தியத்தை உணர முடியாதல்லவா?

இப்பொழுது விளங்குகிறதா? இந்தியா ஒரே நாடு - இந்தியே தேசீய மொழி என்பதன் உட்கருத்து!

இவைகள். இந்திய ஏகாதிபத்தியப் புலிகளுக்குப் பாதுகாப்பான பசுத்தோலாக இருக்கின்றன!

இந்தத் தோலைப் போர்த்திக்கொண்டு தான், உலகிலுள்ள ஏகாதிபத்திய வெறியர்களுக்கு 'ஞானேபதேசம்' செய்துகொண்டிருக்கிருர்கள் நேரு பண்டிதர்கள்!

இந்தியாவுங்கூட ஒரு ஏகாதிபத்திய வல்லரசுதான் என்பது உலகிற்கு வெளிச்சமாகிவிட்டால், நேரு பண்டிதர்களின் பெரிய மனிதத் தன்மையும் காற்ருேடு கரைந்துவிடும்.

அப்படிக் கரைய விடக்கூடாதே என்றுதான் கட்டுப்பாடாக, வடவர்களும் அவர்களின் வாலேந்திகளும் இந்தியா ஒரே நாடு - இந்திதான் தேசீய மொழி என்று சொல்கிருர்கள்! இதுகூட அதிசயமில்லை!

பனிமலை நெஞ்சு படைத்த தமிழன்.

தமிழ்நாட்டு மந்திரிகள் என்னும் பொங்கற் சோற்று அமைச்சர்கள் இந்திக்கு வால்பிடிப்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை!

தமிழ் நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயரில்லை. 'திரு' என்னும் தமிழின் இடத்தில் 'ஸ்ரீ' ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்தி எல்லாத் துறைகளிலும் குந்திக்கொண்டு குரங்காட்டம் ஆட்டிக்கொண்டிருக்கிறது.

இத்தனை அவமானத்திற்கிடையிலும், மந்திரிப் பதவி இருந்தால் போதும் என்று குந்திக்கொண்டு தமிழை வாழவைக்க நாங்கள் அவதாரம் எடுத்திருக்கிரோம் என்கிருர்கள்!

தமிழன் எதைக் கண்டும் கொதிப்படையாத-வடதுருவம் போன்ற - பனிமலையை நெஞ்சாகக் கொண்டிருக்கிருன்.

அதனுல்தான், தைரியமாக தேடிச்சோறு நிதம் தின்று, வேடிக்கை பேசிக் காலந் தள்ளி, நாட்டைக் காட்டிக் கொடுத்துக் கொண்டே வாழ முடிகிறது.

அருப்புக்கோட்டை எம்.எஸ்.இராமசாமி

வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண வாய்வு, இடுப்புப் பிடிப்பு, அஜீரணம், பசியின்மை, வயிற்றுவலி இவைகளை அறவே நீக்கக்கூடியது.

5-பலம் டின் ரு. 3-50.

சம்பு இண்டஸ்ட்ரீஸ், சேலம்-2.
இலங்கையில் கிடைக்கும் இடம்
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

19. இரவில் கேட்ட ஓசை.

அண்ணாமலைப் பண்டிதர் கேட்ட கேள்வியின் பொருள் தெரியாமல் திகைத்து நின்றுகொண்டிருந்த தங்கத்தை நோக்கி அவர் மறுபடியும் கேட்டார், "தங்கம் உனக்கு இந்த மாளிகை பிடித்திருக்கிறதல்லவா? இதுவே உன் சொந்த மாளிகையாக இருந்தால்—உனக்கே உரிய மாளிகையாக இருந்தால் நல்லதல்லவா?" என்று கேட்டார்.

"நான் அதைப்பற்றிக் கற்பனை செய்து பார்க்கக்கூட அருகதை யற்றவள்! எனக்கெதற்கு இதெல்லாம். அரச பரம்பரையிலே பிறந்தவர்களுக்கும், செல்வக்குடியிலே சிறந்திருப்பவர்களுக்கும்தான் அந்த எண்ணமெல்லாம் ஏற்பட வேண்டும். என்னைப் போன்றவர்கள், இருக்கின்ற இடத்தில் ஒழுங்காக இருந்தால் போதும். இந்த மாளிகை வாசமெல்லாம் எனக்குத் தேவையில்லை." என்று தங்கம் மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள். தன் மனத்தில் ஓடிய எண்ணங்களை அவள் வாய்விட்டுச் சொல்லவில்லை. அண்ணாமலைப் பண்டிதரின் எதிரில் அவ்வளவு துடுக்காகப் பேசக்கூடிய தைரியம் அவளுக்கு எழவில்லை என்று தான் சொல்லவேண்டும். ஆனால், அண்ணாமலைப் பண்டிதர் அவள் நெஞ்சிலோடிய அந்த எண்ணங்களை அப்படியே அறிந்துகொண்டார். அனுபவ மிகுந்த அவருடைய கூரிய கண்கள், அவள் இதயத்தினுள் நடைபெற்ற எண்ண ஓட்டத்தை வெகு துல்லிதமாகக் கணக்கிட்டு விட்டன.

"தங்கம், திருமணமே ஆக வழியில்லாத பெண்ணுக்கு மாளிகை வாசத்திலே ஆசை எப்படி ஏற்படும்? என்று தானே சிந்திக்கிறாய்?" என்று கேட்டார் பண்டிதர்.

ஆம் என்று ஒப்புக்கொள்வதுபோல் தங்கம் பேசாமலிருந்தாள்.

"மகளே, தகுதிக்கு மீறிய சிந்தனைகள் கூடாதென்று எண்ணியவர்கள் கோடானு கோடியாய் வாழ்ந்து மடிந்து மண்ணோடு மண்ணாய்ப் போயிருக்கிறார்களே யல்லாமல் சிறந்து விளங்கினார்கள் என்று சொல்வதற்கில்லை.

பேராசை பெரு நஷ்டம் என்று கதைகள் சொல்லிச் சொல்லிக் கருத்துக் குருடர்களாய், வாழ்வில் வசதியற்றோராய் வாழ்ந்து மாண்டவர்கள் கோடி கோடி. ஆனால், உயர்வான எண்ணங் கொண்டவர்களும், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற நெறியில் நின்றவர்களும் தான் வாழ்விலே முன்னேறியிருக்கிறார்கள். இந்த வையகம் புகழும் அளவு, அவர்களுடைய சிறப்புப் பொலிந்து விளங்கி யிருக்கிறது.

"மகளே, இறக்கையா நமக்கிருக்கிறது? நம்மால் எப்படிப் பறக்க முடியும்என்று எண்ணிக்கொண்டிருந்தவன். இன்னும் பெருச்சாளி வாகனத்தைத் தான் சுமந்துகொண்டு ஊரைச் சுற்றி வருகிறான். இறக்கை யில்லாவிட்டால் என்ன, இந்த வையகத்தும் மேலேயுள்ள வெட்ட வெளியில் பறந்து பார்ப்போம் என்று முயன்றவர்களின் பரம்பரை இன்று உலகத்தையே சுற்றி வருகிறது. உலகத்தை மட்டுமல்ல, மற்ற அண்டகோளங்களுக்கும் போய் வரவேண்டுமென்ற ஆசை மனிதனுக்கு உண்டாகி யிருக்கிறது. பெண்ணே, இந்த ஆசையெல்லாம் பேராசையென்று மனிதன் ஒதுக்கித் தள்ளியிருந்தால் இன்று இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியுமா?" என்று புரட்சி முரசு கொட்டும் இளைஞர்களைப் போல் பேசினார் பண்டிதர்.

"அதற்காக நான் மாளிகை வாசியாக வேண்டுமென்று ஆசைப்படச் சொல்கிறீர்களா?" என்று துணிந்து வாய்திறந்து கேட்டு விட்டாள் தங்கம்.

"ஆசைப்பட வேண்டாம், தங்கம். ஆனால், அந்த மாளிகை வாசம் தானாக உன்னைத் தேடி வந்தால் அதை நீ ஒதுக்கித் தள்ளாமலாவது இருப்பாயல்லவா?" என்று கேட்டார்.

தங்கம் அவரை நிமிர்ந்து நோக்கினாள். அண்ணாமலைப் பண்டிதர் ஏதோ புதிர் போடுகிறார் என்று அவளுக்குத் தெரிந்தது. ஆனால், அதன் பொருளை அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை.

அவள் குழப்பமான நிலையில் நின்று கொண்டிருந்தாள்.

"தங்கம், நான் நினைத்தால் உன்னை இந்த மாளிகைக்கே அரசியாக்கி விடுவேன். நீ சம்மதமென்றால் போதும்" என்று மற்றுமொரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போனார் அண்ணாமலைப் பண்டிதர்

அவர் மரஞ் செடிகளுக்கிடையிலே நுழைந்து மாளிகையை நோக்கிச் சென்றார். சென்றுகொண்டிருந்த அவரையே பார்த்துக்கொண்டு குழம்பிய சிந்தனையோடு நின்றுகொண்டிருந்தாள் தங்கம்.

பாவம்! தங்கம்! வயதுப் பெண்ணான அவளுக்கு மனத்தில் எவ்விதமான சலனமும் இன்றி அமைதியாக இருந்தோமென்ற நிம்மதியே கிடையாது. எங்கே போனாலும் எப்படியாவது ஏதாவது ஒரு புதுப் பிரச்சினை வந்து அவள் உள்ளத்தை அலைமோத வைத்துவிடுவதே இயல்பாகி விட்டது. சிலசமயம், தங்கம்தான் பிறந்த வேளை சரியில்லையோ என்றுகூட எண்ணிக் கொள்ளுவாள். பிறகு, அது மூட மதியினரின் எண்ணம் என்று அந்தக் கருத்தை விலக்கிக் கொள்ள முயலுவாள்.

மாளிகையின் அழகையும், கவர்ச்சியையும், உயர்வையும் சிறப்பையும் கண்டு மகிழ்ச்சியடைந்தாள் தங்கம். எந்தப் பொருளும் சிறந்த பொருளாக இருந்தால், அது யாருடைய பொருளாக இருந்தாலும் அதைக் கண்ட அளவானே ஓர் இன்பம் பிறக்கிறது. செவ்விய உடலும் கவர்ச்சியான தோற்றமும், குறுகுறுக்கும் விழிகளும், துருதுருப்பான இயக்கமும், கற்கண்டு மழலையும் பொருந்திய சிறு குழந்தைகளைக் கண்டால், அவற்றைக் கண்ட மாத்திரத் தானே தூக்கி வைத்துக் கொண்டு அவற்றுடன் உரையாட வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்—அவற்றின் செக்கச் சிவந்த கன்னத்திலே முத்தமிட்டுச் சித்தங் குளிர வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். அந்தக் குழந்தைகளை ஒருமுறையாவது தோளில் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை தோன்றும். இவ்வளவு தோன்றாவிட்டாலும், அவை துருதுருவென்று அங்குமிங்கும் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கவாவது ஆசை யுண்டாகும். அந்தக் குழந்தை யாருடைய குழந்தை. அதன் பிறப்பென்ன, வளர்ப்பென்ன என்றெல்லாம் யோசிக்கத் தோன்றுவதில்லை. அது போலவே தான். அழகான இயற்கைக் காட்சி எதையாவது கண்டால் அதையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்போல் ஓர் ஆசை மனத்தகத்தே எழுதுவதுண்டு. அதற்காக அந்த இயற்கைக் காட்சியை எப்பொழுதும் நிலையானதாகத் தன் வீட்டினுள்ளே கொண்டுவந்து விடவேண்டுமென்று எண்ணினால் முடியுமா? வேண்டுமானால், கைதேர்ந்த ஓவியன் அப்படிச் செய்ய முடியும்.

தங்கம் அந்த மாளிகையின் அழகைக் கண்டு தன்னகத்தே கொண்ட மகிழ்ச்சி, காட்சியளவால் பெற்ற இன்பத்தினால் ஏற்பட்டதுதான். அந்த மகிழ்ச்சியோடு அவள் தோட்டத்துக் குளிர் தென்றலையும் நிழலையும் சற்று நேரம் அனுபவித்து இன்பமாக இருக்கலாம் என்று வந்தாள். ஆனால், அண்ணாமலைப் பண்டிதர் சொன்ன செய்திகள் அவளை அந்த இன்பங்களை அனுபவிக்க விடாமல், உள்ளத்தைச் சிந்தனைப் பாதையிலே திருப்பி விடுவதாக அமைந்துவிட்டன.

அண்ணாமலைப் பண்டிதர் என்ன கருத்தோடு அவ்வாறு சொன்னார் என்று எண்ணி எண்ணிப் பார்த்தாள்.

"மாளிகையாவது, தனக்குச் சொந்தமாவதாவது! அது கனவிலும் நினைக்கக்கூடிய காரியமல்ல!' என்று தான் அவளுக்குத் தோன்றியது. மாளிகைக்கு உரியவர்கள் உயிரோடு இருக்கிறார்கள். அவர்கள் இறந்த பின் தனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம் என்றால் அவள் அவர்களின் உறவுக்காரியும் அல்ல. அவர்களுக்குப் பிள்ளையிருக்கிறதா இல்லையா என்பதும் அவளுக்குத் தெரியாது. அப்படியே பிள்ளை யில்லாதவர்களாய் இருந்தாலும், அவர்களுடைய தத்துப் பிள்ளைகளாய் வரலாமென்று ஆண் பிள்ளைகள் அதிலும் சொந்தக்காரப் பிள்ளைகள் எதிர்பார்ப்பதிலே பொருள் உண்டு.

தான் ஒரு பெண்பிள்ளை அதை எப்படி எதிர்பார்க்க முடியும்? என்றெல்லாம் பற்பலவாறு எண்ணிக் குழம்பினாள் தங்கம்.

நேரம் பாடு போய்க்கொண் டிருந்தது.

பணிப்பெண் ஒருத்தி தங்கத்தைத் தேடி வந்தாள், சிற்றுண்டி யருந்த அழைப்பதற்காக.

தங்கம் கூடத்தினுள் நுழைந்த போது, கூடத்தின் மத்தியில் விரித்திருந்த அழகான இரத்தினக் கம்பள விரிப்பின்மீது ஜமீந்தார் கருணாகரர், அண்ணாமலைப் பண்டிதர், பெரியம்மா மூவரும் அமர்ந்திருந்தார்கள். ஜமீந்தாரின் முன்னால் வெல்வெட்டு உறையினால் மூடிய சிறு சிறுமரப் பெட்டிகள் இரண்டு மூன்று இருந்தன. அவற்றைப் பார்த்த உடனே அவை நகைப் பெட்டிகள் என்று தெரிந்துகொள்ள முடிந்தது. ஏதோ நகைகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தங்கம் எண்ணிக்கொண்டு தூரத்திலேயே நின்றாள்.

அவள் கூடத்து வாசலில் நுழைந்தவுடனேயே நிமிர்ந்து பார்த்த ஜமீந்

தார், "வாம்மா, தங்கம் வா! உன்னைத் தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்!" என்று வரவேற்றார். தங்கம். அருகில் நெருங்கிச் சென்று ஒதுங்கி நின்று கொண்டாள்.

"தங்கம், இங்கே வா!" என்று ஜமீந்தாரிணி யம்மாள் அவளை அழைத்துத் தன்னருகில் விரிப்பின்மீது வந்து அமரச்சொல்லி யழைத்தாள். தங்கம் தட்டமாட்டாமல் அருகே போய் அமர்ந்தாள்.

ஜமீந்தார், நகைப்பெட்டி ஒன்றினுள்ளிருந்து வைர வடச் சங்கிலி' ஒன்றை எடுத்து, "இந்தா, தங்கம்! இதை உன் கழுத்தில் அணிந்துகொள்" என்றார்.

தங்கம் வெறித்துப் பார்த்தாள். அவர்கள் செயல் அவளுக்குப் புரியாததாயிருந்தது.

"தங்கம்! போய் வாங்கிக் கொள்ளம்மா!" என்று பெரியம்மா பக்கத்திலிருந்து வலியுறுத்திக் கூறினாள்.

ஜமீந்தார் வீடென்றால் என்ன, தங்கமும் வைரமும் சுண்டல்போலவா அள்ளிக் கொடுப்பார்கள்!

"இல்லை, இதெல்லாம் எனக்கு அணிந்து பழக்கமில்லை. வேண்டாம்!" என்று குழறிக் குழறிக்கொண்டே தங்கம் பதில் கூறினாள்.

"தங்கம், உனக்கு இதையெல்லாம் போட்டுப் பார்க்கவேண்டுமென்று எங்கள் ஆசை! எங்கள் ஆசையை நிறைவேற்றக் கூடாதா?" என்று வேண்டுதலாகக் கூறினார் கருணாகர ஜமீந்தார்.

"கண்ணல்ல! போட்டுக் காண்பியம்மா!" என்று பெரியம்மா கூடப் பாடினாள்.

அண்ணாமலைப் பண்டிதர் வாய் அசைக்கவே யில்லை.

"பண்டிதரே! நீங்கள் கொஞ்சம் இந்தப் பெண்ணுக்குச் சொல்லக் கூடாதா?" என்று கேட்டார் ஜமீந்தார்.

"தங்கம், அவர்கள் ஆசையைத் தான் நிறைவேற்றி வையேன்! பெரியவர்கள் இவ்வளவு வேண்டுகிறார்கள்—சும்மா யிருக்கிறாயே!" என்று அண்ணாமலைப் பண்டிதர் கூறினார்,

கடைசியில் தங்கம் மறுக்க முடியாமல் அந்த வைர வடச் சங்கிலியை எடுத்துக் கழுத்தில் அணிந்துகொண்டாள். உடனே கருணாகர ஜமீந்தாரும் ஜமீந்தாரிணி யம்மாளும், "ஆகா! என்ன அழகு! என்ன அழகு! இவளுக்கும் இந்த வைர மாலைக்கும் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!' என்று பாராட்டிப் பேசிக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அந்தக் கூடத்தின் கோடியில் ஒரு நீண்ட பெரிய சுவர்க் கண்ணாடி யிருந்தது ஜமீந்தாரிணி யம்மாள் தங்கத்தின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் அந்தக் கண்ணாடியின் முன்னால் நிறுத்தினாள்.

"பார்த்தாயா தங்கம், இந்த வைர வடமாலையைப் போட்டதும் எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று பாராட்டிப் பேசினாள்.

தங்கம், தன் முல்லைப்பற்கள் தெரிய ஒரு சின்னச் சிரிப்புச் சிரித்தாள். உண்மையிலேயே அந்த வைர வடமாலையைத் தன் கழுத்திலே யணிந்த பின் தனியழகு ஒன்று தனக்குப் புதிதாக ஏற்பட்டிருப்பதுபோல்தான் தங்கத்திற்குத் தோன்றியது வைத்த கண் வாங்காமல். நிலைக் கண்ணாடியில் தோன்றிய தன் புத்தழகு உருவத்தை அவள் பார்த்துக்கொண்டு நின்றாள்.

'தங்கம் உனக்கு இது நல்லாப் பொருத்தமாயிருக்கு! இதை நீயே வைத்துக்கொள்" என்றாள் ஜமீந்தாரிணி பெரியம்மாள்.

அவ்வளவுதான் தங்கம், தன் கழுத்தில் இருந்த வைர வடச் சங்கிலியைச் சட்டென்று கழற்றினாள்; விருட்டென்று திரும்பி வந்தாள். கருணாகரர் முன்னால் இருந்த ஒரு மரப்பெட்டியைத் திறந்து அதில் வைத்துப் படக்கென்று மூடினாள். அந்தப் பெட்டியை அவர் எதிரே வைத்துவிட்டுப் பின் வாங்கி நின்றுகொண்டாள். அவள் முகம் உம்மென்றிருந்தது.—சிவ்வென்று சிவந்து போயிருந்தது.

அவள் கோபங் கொண்டிருக்கிறாள் என்பதை எல்லோரும் கண்டுகொண்டார்கள்.

ஜமீந்தார் கருணாகரர் அவளுடைய கோபத்தைக் கண்டு வருத்தப்பட்டவர் போல், நகைப் பெட்டிகளை மூடி வைத்தார். அவற்றை யெல்லாம் இருப்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு எழுந்திருந்தார். அவர் சாப்பாட்டுக் கூடத்தை நோக்கிச் செல்ல அண்ணாமலைப் பண்டிதரும் பின் தொடர்ந்தார்.

ஜமீந்தாரிணி பெரியம்மாள் தங்கத்தின் அருகில் வந்து, "தங்கம், கோபமா?" என்று கெஞ்சுதலாகக் கேட்டு—அணைவாகப் பிடித்து, 'உனக்குப் பிடிக்கவில்லையென்றால், நான் இனிமேல் அந்தமாதிரி செய்ய மாட்டேனம்மா! வா, இப்போது சாப்பிடப் போகலாம்" என்று தயவாக அழைத்தாள்.

"நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே. சீரொழுகு சான்றோர் சினம்" என்று ஒரு பழம்பாடல் கூறுகிறது.

ஜமீந்தாரிணி யம்மாளின் தயவான வார்த்தைகளைக் கேட்டவுடன் தங்கத்தின் கோபம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது.

பிறகு இருவரும் சிற்றுண்டி யருந்தப் போனார்கள்.

சிறிதுநேரத்திற்கு முன் தான் வயிறு நிறையச் சாப்பிட்டபடியாலும், பசியில்லாததாலும், மாலையில் சிற்றுண்டி உண்டு பழக்கமில்லையாகையாலும் தங்கத்தால் நன்றாகத் தயாரிக்கப்பட்டிருந்த அந்தச் சிற்றுண்டியைச் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை. அவளுக்கு அப்போது சிற்றுண்டியின் மீது விருப்பம் எழவில்லையானாலும், எங்கே தான் இன்னும் கோபமாக இருப்பதாக நினைத்து மற்றவர்கள் வருத்தப்படுவார்களோ என்று பயந்து மற்றவர்களைப்போலவே அதைச் சாப்பிடலானாள்,

சிற்றுண்டியுண்டு காப்பி குடித்து வெற்றிலை போட்டுக்கொண்ட பிறகு, அண்ணாமலைப் பண்டிதர் ஜமீந்தாரிடம் விடை பெற்றுக்கொண்டார் தங்கமும் கருணாகரரிடமும், பெரியம்மாளிடமும் விடை பெற்றுக் கொண்டாள். பண்டிதரும், தங்கமும் ஜமீந்தார் வீட்டார் பின் தொடர வெளியில் வந்தபோது, அங்கு அவர்கள் வந்த மாட்டுவண்டி பூட்டித் தயாராக வைக்கப்பட்டிருந்தது. அந்த வண்டியைக் கண்டவுடன், மறுபடியும் தான் தான் அதை ஓட்டிச் செல்ல வேண்டுமோ என்று மனஞ் சலித்துக் கொண்டாள் தங்கம். ஆனால், நல்ல வேளையாக, "கருப்பா, ஐயாவைப் போய் இறக்கிவிட்டு விட்டு வா!" என்று ஜமீந்தார் தம் வேலைக்காரனுக்கு அப்போது உத்தரவு கொடுத்தார். தங்கம் மனம் நிம்மதி யடைந்தது. அவள் வண்டியில் ஏறி உட்கார்ந்த பிறகு ஏதோ சிறையிலிருந்து விடுபட்டதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அண்ணாமலைப் பண்டிதரும் கருப்பனும் வண்டியில் ஏறிய பின் வண்டி புறப்படப் போகுமுன் ஜமீந்தாரிணி பெரியம்மாள், "தங்கம், அடிக்கடி இங்கு வாம்மா!" என்று கூவினாள். தங்கத்திற்குத் திரும்ப அங்கு வர நோக்கம் இல்லையானாலும், "சரி" என்று தலையை யாட்டினாள். "வருகிறேன்" என்று வாய்விட்டுச் சொன்னாள்.

வண்டி புறப்பட்டது. வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது வழியில் அண்ணாமலைப் பண்டிதர் தங்கத்திடம் எதுவும் பேசவில்லை. கருப்பன் அவர்களை நெய்யூரில் கந்தசாமி வாத்தியார் வீட்டில் இறக்கி விட்டுவிட்டு வண்டியைத் திருப்பிக்கொண்டு போய் விட்டான்.

வண்டியிலிருந்து இறங்கிய அண்ணாமலைப் பண்டிதர், கால் முகம் கழுவி விட்டு நேராக மாடியில் உள்ள தம் அறைக்குச் சென்று விட்டார். தங்கம், நேராக அடுக்களைக் கட்டிற்குச் சென்று தன் தாயைச் சந்தித்தாள். மரகத அம்மாள் அப்போது, பருப்புப் பொறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அதாவது பருப்பிலிருந்து கல். முதலியவற்றை எடுத் தகற்றிக்கொண்டிருந்தாள். அவசரமாக வந்து நுழைந்த தங்கத்தைக் கண்டவுடன் அவள் ஏதோ தன்னிடம் சொல்ல விருப்புடையவளாய் இருக்கிறாள் என்பதை அறிந்துகொண்ட மரகத அம்மாள், "வா, தங்கம்! இப்போதுதான் வந்தாயா? இந்தப் பருப்பைக் கொஞ்சம் பொறுக்கு!" என்று சொன்னாள். தங்கம் உட்கார்ந்து பருப்புப் பொறுக்க ஆரம்பித்தாள். தான் வண்டி யோட்டிக் கொண்டு போனதைப்பற்றிக் குறைப்பட்டு ஏதாவது சொல்லுவாள் தங்கம் என்று எதிர்பார்த்தாள் மரகத அம்மாள். ஆனால், அவள் கேட்டதெல்லாம் புதுமையாயிருந்தது!

ஜமீந்தார் வீட்டில் தான் போய் இறங்கியது முதல் திரும்ப வண்டியேறியது வரை, ஒரு சிறு நிகழ்ச்சிகூட விட்டுப் போகாமல் சொல்லி முடித்தாள் தங்கம். அத்துடன் நில்லாமல், "அம்மா! பண்டிதர் ஏதோ திட்டம் போட்டு வேலை செய்வதுபோல் இருக்கிறதம்மா! எல்லாம் மர்மமாக இருக்கிறது!" என்று ஒரு வரியும் சேர்த்துக் கூறினாள்.

மரகத அம்மாளுக்கும், அப்படித் தான் தோன்றியது. "தங்கம், பண்டிதர் நல்லவர். அவர் எது செய்தாலும் நமது நன்மைக்குச் செய்வாரேயொழிய வேறு காரணமாகச் செய்ய மாட்டார்" என்று தன் மகளிடம் சொன்னாள். இந்தச் சொற்கள் தங்கத்தின் மனத்தில் ஆழமாகப் பதிந்தன.

அண்ணாமலைப் பண்டிதர் தீயவர் என்று அவள் ஒரு கணம்கூட நினைத்துப் பார்த்ததில்லை. ஆனால், அவர் ஏன் எல்லாச் செயல்களையும் மர்மம் என்று படும்படியாகச் செய்கிறார் என்று அவளுக்குப் புரியவில்லை, இவ்வளவு நல்ல மனிதர் வெளிப்படையாகத் தோன்றும்படி ஏன் எந்தச் செயலையும் செய்யவில்லை என்று அவள் எண்ணினாள். ஆனால், அவள் தன் எண்ணத்தை வெளிப்படுத்தவில்லை.

ஆரம்பத்தில் எல்லாம் அண்ணாமலைப் பண்டிதருக்கும் சுந்தரேசனுக்கும் என்ன தொடர்பு அல்லது பகை என்ன என்று தெரியாமல் குழம்பிய தங்கம், அவர் நடராசன்மீது அக்கறை காட்டியபோதெல்லாம், அவருக்கும் நடராசனுக்கும் என்ன உறவு என்று தெரியாமல் வியந்த தங்கம் இப்போது இந்த ஜமீந்தார் வீட்டுக்கும் இவருக்கும் என்ன தொடர்பு அல்லது உறவு என்று தெரியாமல் கலங்கினாள்.

மரகத அம்மாளுக்கும் இப்படிப்பட்ட சந்தேகங்கள் இருந்தாலும் அவள் அண்ணாமலைப் பண்டிதரிடம் தன்னையறியாமல் வைத்திருந்த பெரு மதிப்பு - அவர் செயலில் சூது இருக்கும் என்று எண்ண இடங் கொடுக்கவில்லை. ஒளிவு மறைவு இருக்கின்றதென்றாலும் சூழ்ச்சி வஞ்சம் அதிலே இருக்காதென்று நிச்சயமாக நம்பினாள். அதனால்தான் அவள் தன் மகளிடம் அவர் தங்களுக்கு நன்மையே செய்வார் என்று வலிதாகக் கூறினாள்.

அன்று இரவு உண்டு பின் எல்லோரும் உறங்கச் சென்றார்கள். ஆனால், தங்கத்துக்கு என்னவோ இரவு முழுவதும் சரியாக உறக்கம் வரவேயில்லை. ஜமீந்தார் வீட்டில் நிகழ்ந்த சம்பவங்கள் திருப்பத் திரும்ப நினைவுக்கு வந்தன. ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு தடவையும் அவள் ஒவ்வொரு பொருள் கற்பித்துக்கொண்டு இன்ன முடிவுக்கு வருவதென்று தெரியாமல் கலங்கிக் கொண்டிருந்தாள். ஆகவே தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

நள்ளிரவு நேரம். எல்லோரும் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தார்கள், தங்கத்தைத் தவிர! வீடு முழுவதும் எவ்விதமான ஓசையுமில்லாமல் இருந்தது.

சிந்தனை வயப்பட்டுக் குழம்பிய நிலையில் புரண்டு கொண்டிருந்த தங்கம், தன் சிந்தனையை மறந்து ஒரு விஷயத்தைக் கவனிக்கும்படியாக நேர்ந்தது. அதற்கு அவள் காதிலே பட்ட ஒரு வகை ஓசைதான் காரணம். அந்த ஓசையை அவள் முதன்முதலில் கவனிக்க நேர்ந்தபோது, திடுக்கிட்டாள். பிறகு நெஞ்சைப் பிடித்துக்கொண்டு ஊன்றிக் கவனித்தாள்.

யாரோ வீட்டுக்குள்ளே இருட்டில் மெதுவாக நடந்து செல்வதுபோன்ற ஓசை கேட்டது. தட்டுத் தடுமாறி அந்தக் காலடிகள் நடப்பதுபோலவும்-அதே சமயம், ஓசைப்படாமல் செல்ல முயல்வதுபோலவும் இருந்தது. சிறிது நேரத்திற்குப் பின் அந்தக் காலடி மாடிப் படியில் ஏறிச் செல்வதுபோல் தோன்றியது. மாடிப்படியில் ஏறிய அந்தக் காலடியோசை சிறிதுநேரம் வரை நின்றிருந்ததுபோலவும், திரும்பவும் இறங்கியதுபோலவும் இருந்தது. பின்னர் அது தெருக் கதவை நோக்கிச் சென்றதுபோலவும் இருந்தது.

பயந்து துடித்து அடித்துக்கொண்டிருக்கும் நெஞ்சை ஒற்றைக் கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டு சன்னல் அருகே மெல்ல நகர்ந்து சென்றாள் தங்கம். மெல்ல எட்டி வாசற் பக்கம் நோக்கினாள். அவர்கள் வீட்டு வாசற் படியிலிருந்து ஓருருவம் வீதியை நோக்கி நகர்ந்து சென்றுகொண்டிருந்தது. மெல்ல மெல்ல நகர்ந்த அந்த உருவம், வீதியை அடைந்ததும் வேகமாக நடந்தது. அந்த உருவத்தைக் கூர்ந்து நோக்கியபோது அது ஓர் இளைஞனுடைய உருவமாக இருந்தது.

இப்போது வீட்டிற்கு வந்து போனது யார்—எதற்காக இந்த நள்ளிரவில் தன் வீட்டிற்குள் வர வேண்டும். அது மேலே ஏன் சென்றது. அண்ணாமலைப் பண்டிதரை அது சந்திக்கச் சென்றதா? அப்படியானால், அவருடைய அறைக் கதவு தட்டப்படும் சத்தமோ, அல்லது பேச்சுக் குரலோ ஏன் ஏற்படவில்லை. வந்த அந்த உருவம் உடனடியாக ஏன் திரும்பி விட்டது. அதற்கு யார் கதவு திறந்து விட்டார்கள்? என்பது போன்ற சந்தேகங்கள் அவள் உள்ளத்தைக் குடைந்தன.

தமிழ் வளர்ச்சியில் அக்கறையுண்டா?

''மாநகராட்சிமன்ற நடவடிக்கைகளில், 'ஸ்ரீ' 'ஸ்ரீமதி' என்ற சொற்களை நீக்கி, அவற்றிற்குப் பதில், 'திரு' 'திருமதி' என்ற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்'' என்ற தீர்மானம் சென்னை மாநகராட்சி மன்றத்தில் கடந்த 1959 ஆகஸ்டு 11-ம் நாளன்று தி. மு. கழக உறுப்பினர் ஒருவரால் கொண்டு வரப்பட்டு எல்லாக் கட்சி உறுப்பினர்களின் ஒப்புதலும் பெறப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக இத்தகைய ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முன் வந்தது, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆளும் கட்சியாகக் கொண்டுள்ள சென்னை மாநகராட்சி மன்றம்தான் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

சென்னை மாநகராட்சியைப் பின் தொடர்ந்து, மதுரை, கோவை, திருச்சி, சேலம் போன்ற நகராட்சி மன்றங்களும் ஊராட்சிமன்றங்களும் இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன. இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்படாத நகராட்சியோ, ஊராட்சியோ இன்று தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, எல்லா உள்ளாட்சி மன்றங்களிலும் 'ஸ்ரீ' 'ஸ்ரீமதி' ஒழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

உள்ளாட்சி மன்றங்களுக்கு தீர்மானம் நிறைவேற்றத்தான் உரிமை இருக்கிறதே தவிர, அதைத் தம் விரும்பம்போல் செயல்படுத்த உரிமை கிடையாது; ஆட்சியாளரின் ஒப்புதல் கிடைத்தால்தான் அதைச் செயல்படுத்தமுடியும். எனவே, ஆட்சியாளரின் ஒப்புதலுக்காக அத்துணை உள்ளாட்சி மன்றங்களும் இத்தீர்மானத்தைச் செயல்படுத்தாமல் காத்துக் கிடக்கின்றன

உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்றியனுப்பிய இந்தத் தீர்மானத்தின் நகல்கள், அரசாங்க 'ஊறுகாய்ப் பானை'யில் ஊறிக்கொண்டிருக்கின்றன. அவைபற்றிப பேச்சுமூச்சைக் காணோம்.

இதுபற்றி, சட்ட மன்றத்தில் கேட்டபோது, 'இன்னும் பரிசீலிக்கிறோம்' என்ற பதில் மட்டுமே உள்ளாட்சித் துறையமைச்சர் திருமதி லூர்து அம்மையார் வாயிலிருந்து வெளி வந்தது

கடந்த ஓராண்டுக்குமேல் பரிசீலிக்கப்படுவதற்கு இத்தீர்மானத்தில் என்ன அப்படித் தீராத சிக்கல் இருக்கிறது என்பது நமக்குப் புலனாகவில்லை. தமிழை ஆட்சி மொழியாக்கி யிருப்பதாகப் பெருமையடித்துக்கொள்ளும், காங்கிரசு ஆட்சியாளர்களின் நிர்வாகத்தில், 'திரு', 'திருமதி' என்று எழுத இன்னும் உரிமை கிடைக்கவில்லையென்றால் இந்த 'வெட்கக்கேட்டை' யாரிடம் சொல்லி யழுவது?

இதுபற்றிச் சட்டமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அமைச்சர் லூர்து அம்மையார் பலளித்தபோது, நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் குறுக்கிட்டு, ''திரு'', ''திருமதி'' என்று எழுதுவதில் தடையேதும் இல்லை; அவரவர் விருப்பம்போல் 'ஸ்ரீ', 'ஸ்ரீமதி' என்றோ, 'திரு' 'திருமதி' என்றோ எழுதலாம்'' என்று கூறினார்.

நிதியமைச்சரின் கூற்றுப்படி, 'திரு', 'திருமதி என்று எழுதத் தடையில்லை என்றால், உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானத்திற்கு ஒப்புதலளிக்கத் தடையென்ன? அவரவர் விருப்பம்போல் எழுதலாம் என்றால், இத்தீர்மானத்தை நிறைவேற்றிய உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் 'திரு', 'திருமதி' என்றே எழுத விரும்புகின்றன என்பதையறிந்தாவது இம்மன்றங்களுக்குஒப்புதலளிக்கக் கூடாதா?

நேற்றைக்கு முன்னாள் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில், 'திரு', 'திருமதி' பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ன ஆயிற்று-என்று மாநகராட்சி மன்றக் கட்சித் தலைவர் என். சீவரத்தினம் அவர்கள் கேட்டதற்கு, 'இன்னும் அத்தீர்மானத்திற்கு அரசினர் ஒப்பம் கிடைக்கவில்லை' என்று பதிலளித்திருக்கிறார் ஆணையாளர்; 'அரசியலார் ஒப்புதலின்றி அத்தீர்மானத்தைச் செயல்படுத்த இயலாது' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இதுபற்றி அரசினருக்குப் பலமுறை கடிதங்கள் எழுதியிருப்பதாகவும் ஆணையாளர் கூறியிருக்கிறார். இதன் பொருள் என்ன?

தீர்மானம் நிறைவேற்றி ஓராண்டுக்கு மேலாகிறது; அதுபற்றிப் நினைவூட்டிக் கடிதங்களும் பொறுப்புள்ளவர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நிலையிலும் அரசாங்கம் அசைந்து கொடுக்கவில்லையென்றால், இதற்கு என்ன பொருள்? பொதுமக்கள்தான் சிந்தித்து முடிவு கூறவேண்டும்.

'சென்னை மாநகராட்சி மன்றத்தின் ஆட்சிமொழியும் தமிழாகவே இருக்க வேண்டும்' என்ற ஏற்கனவே காங்கிரசுக் கட்சியினரின் ஆளுகையில் மாநகராட்சி மன்றம் இருந்தபோதே ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர். ஆனால் இன்றளவும் அந்தத் தீர்மானமும் முழு அளவுக்குச் செயல்படுத்தப்படவில்லை என்பது கண்கூடு.

மாநில அரசாங்க ஆட்சிமொழியும் தமிழ்; மாநகராட்சி மன்ற ஆட்சி மொழியும் தமிழ்; ஆனால், 'திரு' 'திருமதி' என்று எழுத இன்னும் உரிமை கிடைக்கவில்லை என்பது தான் விந்தையிலும் விந்தையாக உள்ளது.

'தமிழை ஆட்சிமொழியாக்கிவிட்டோம்' என்று பேசுவது பாமர மக்களை ஏமாற்றி ஓட்டுப் பெறுவதற்குத்தான் பயன்படுகிறதே தவிர, இதனால் தமிழுக்கு நன்மை ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

'திரு' 'திருமதி' என்று எழுதுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை'' என்று சட்டமன்றத்தில் வெளிப்படையாகக் கூறும் நிதியமைச்சர் அவர்கள் தம் உள்ளத்தில் கள்ளம் கபடமில்லாமல் அதைக் கூறியிருப்பாரேயானால், 'அதே சொற்றொடரை' அரசாங்க முத்திரையுடன் கூடிய ஒரு ஆணையாக மாற்றி உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைப்பதில் தடையென்ன இருக்கிறது? அப்படி அனுப்பி வைத்திருந்தால், உள்ளபடியே, தமிழ் வளர்ச்சியில் அக்கறையும், உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களை மதிக்கும் பண்பும் ஆட்சியாளருக்கு இருக்கிறது என்பதை மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாக அமையும். இனியேனும், ஆட்சியாளர்கள் இதைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

—நம்நாடு.

தலைமை நிலையச்செய்தி

இந்தித் திணிப்புக் கண்டன வாரத் தீர்மானங்கள்

இந்தித் திணிப்புக் கண்டன வாரப் பொதுக்கூட்டங்களில் கழகத் தோழர்கள் கீழ்க்கண்டவாறு தீர்மானங்களை நிறைவேற்றி இந்தியப் பிரதமருக்கும், அந்தந்த மாநில முதலமைச்சர்களுக்கும், தி. மு. க. தலைமைக் கழகத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்:—

1. ''திராவிட மக்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தியை நேரிடையாகவும் மறைமுகமாகவும், பல்வேறு துறைகளில் அதிகாரத்தின் துணைகொண்டு திணிக்கும் இந்தியப் பேரரசு, மாநில அரசு ஆகியவற்றின் போக்கினை இப்பொதுக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது,''

2. ''இந்தி பேசப்படாத மாநில மக்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தி எக்காலத்திலும் திணிக்கப்பட மாட்டாது என்றும், பொதுமொழியைப் பொறுத்து இதுவரை இருந்து வந்த நிலையே நீடிப்பதற்கு வகைசெய்ய வேண்டுமென்றும், இந்தியக்குடியரசுத் தலைவர் இரசேந்திரப் பிரசாத், பிரதமர் நேரு உள்துறை அமைச்சர் பந்த் ஆகியோர் தந்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கும் வகையில் அரசியல்சட்டத்தை உடனடியாகத் திருத்துமாறு ஆட்சியாளரை இப்பொதுக்கூட்டம் வற்புறுத்துகிறது.''

—தலைமைக் கழகம்(தி. மு. க.)

திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நாளது ஆவணித்திங்கள் 24-ம் நாள் (8-9-60) வியாழன் காலை 8-00 மணியளவில் எனக்கும் திரு, எம். எஸ். முகம்மது நயினார். அவர்களுடைய புதல்வி திருவாட்டி மல்லிகாவிற்கும் தென்காசி, நடப்பேட்டைத் தெருவிலுள்ள மணமகள் இல்லத்தில் நிகழவிருக்கும் மணவிழாவிற்கு நண்பர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வருகைத் தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஹெரிபோர்டு இல்லம்
வல்லம்
வழி: தென்காசி
1—9—60

அன்பன்,
க. மு. கதிரவன்.
தி மு. க. செயலாளர்,
(செங்கோட்டை)

வெண்பாப் போட்டி-5.

★

ஈற்றடி

தேடிக் கொணர்ந்த திரு.

இறுதி நாள் 10-9-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

விரைவில் வெளிவருகிறது.

கண்ணதாசன்

கட்டுரைகள், -கதைகள், -நாடகங்கள்

விவரங்கட்கு :

தென்றல், சென்னை-6.

முல்லை

செப்டம்பர் இதழ் எங்கும் விற்பனையாகிறது

சிறுகதை

சண்பகம்

நா. ஜகந்நாதன், எம்.ஏ

அந்த அறையில் மாட்டப்பட்டிருந்த ஒரு படம் என் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அந்தப் படம் மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை உணர முடிந்தது படத்தில் உள்ள உருவத்தின் ஆடைகளையும், நகைகளையும் கவனிக்கும்போது, அந்தப் படம் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் வசித்த ஒருவரின் படம் என்று அறியமுடிந்தது. அவ்வளவு பழைய காலத்திய படமாக இருந்தாலும், அதை மிகவும் கவனத்தோடு அவ்வப்போது துடைத்தும், கண்ணாடியைச் சுத்தம் செய்தும் வைத்திருந்ததால், படத்தில் இருந்த உருவம் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது.

நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் அது ஒரு பெண்ணின் படம்தான். அந்தப் பெண்ணின் படத்தில் என்னைக் கவர்ந்தது, அந்த முகத்தில் வீசிய அசாதாரணமான ஒளி! 'காம்பீர்யம்' என்று வடமொழி வல்லுனர்கள் குறிப்பிடும் பாவம் அதன் முகத்தில் குடிகொண்டிருந்தது. மிகப்பெரிய ஒரு காரியத்தைச் சாதித்த ஒருவரின் முகத்தில் வீசும் எடுப்பான தோற்றம் அந்த முகத்தில் இருந்தது. மற்றப்படி, ஒரு பெண்ணிற்கு உரிய இளமை, அழகு, அடக்கம், நாணம் ஆகிய இதர எல்லாப் பண்புகளும் அந்த உருவத்தில் கண்டேன். என்றாலும் மேற்கூறிய காம்பீர்யம் தான் என்னைப் பெரிதும் கவர்ந்தது. படத்தையே நான் உற்றுநோக்கியபடி இருந்ததைக் கண்ட அந்த வீட்டின் சொந்தக்காரர், "என்ன சார்! அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார். 'ஒன்றுமில்லை. எந்தக் காலத்துப் படம் என்று பார்க்கிறேன்" என்று கூறிச் சமாளித்துக்கொண்டேன்.

"சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ஒருவரின் படம்தான் இது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இந்தப் பெண்ணை நாங்கள் எங்களுடைய 'குலதெய்வ'மாகக் கொண்டாடி வருகிறோம், இளமையிலேயே இறந்துவிட்ட இந்த அம்மையார் எங்கள் குடும்பத்தின் விளக்காக இருந்து எங்களை எல்லாம் ஊக்குவித்து வருகிறார். சுருங்கச் சொன்னால் எங்கள் குடும்பத்தினருக்கு இவர் ஒரு 'கடவுளாக' விளங்குகிறார்..." என்றார் நண்பர். அவர் குரல் தழதழத்தது.

படத்தை மீண்டும் நோக்கினேன். பார்த்துவிட்டுப் பிறகு என்கூட வந்த கிழவன் - துணையாக வந்தவன் - இருக்குமிடத்தைப் பார்த்தேன். அவன் கண்களில் நீர்வடிந்துகொண்டிருந்தது; அதை அவன் துடைத்துக் கொண்டிருந்தான். இந்தப் பெண்ணின் உருக்கமான வரலாறு, கிழவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும், வீட்டுச் சொந்தக்காரர் சொன்ன கதை உண்மையாக இருக்கவேண்டும், அதனால்தான் கிழவன் கண்ணீர் உகுக்கிறான் என்று நினைத்துக் கொண்டேன் கிழவன் எப்போதும் என்கூடத்தான் இருக்கப்போகிறான், நான் அந்த ஊரில் இருக்கும்வரையில். ஆகவே இந்தப் பெண்ணின் கதையைக் கிழவனிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று முடிவு செய்துகொண்டேன்; வீட்டுச் சொந்தக்காரரை அந்தப் பெண்ணின் வரலாற்றைக் கூறுமாறு நான் கேட்கவில்லை. எனக்கு அந்த வீட்டில் வேலை முடிந்ததும், விடைபெற்றுக்கொண்டு கிளம்பினேன். கிழவனும் என்கூடவே வந்தான். அவனது கடமை அதுதானே?

அந்த ஊரில் எனக்கு வேலை மிகுதியாக இருந்த காரணத்தாலும், அங்கு நான் சேகரித்த விவரங்களை எல்லாம் தொகுத்து அறிக்கையைத் தயார் செய்து உடனடியாக மேலதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டி இருந்ததாலும், கிழவனோடு பேச எனக்கு நேரமில்லை. நான் வெகு அவசரமாக வேலையில் ஈடுபட்டிருந்ததால் கிழவனும் என்னுடன் பேசித் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை என்று நினைக்க இடமிருந்தது. இரவு பத்து மணி இருக்கும், அன்று. நான் தயாரித்த குறிப்புகளை எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு கையடக்கத் தட்டெழுத்துப் பொறியைக் கொண்டு வர செய்து 'டைப்' அடிக்க உட்கார்ந்தேன். கிழவன் என் அறைக்கு வெளியே 'காவல் காக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு உறக்கத்தில் ஈடுபட்டிருந்தான். டைப் அடிக்கும் சப்தம் கேட்டதால், உறக்கம் கெட்டுவிட்டது போலும்! உடனே எழுந்து சோம்பல் முறித்துக்கொண்டு இரண்டு முறை உள்ளும், புறமும் உலவினான். எனக்கும் வேலை ஓடவில்லை; இந்த மாதிரிச் சமயங்களில் கதை கேட்ட பிறகு, எனக்குப் புதிய உற்சாகம் தோன்றும், பிறகு வேலையில் தீவிரமாக ஈடுபடுவது வழக்கம். ஆகவே அன்றும் கிழவனிடம் அந்த வீட்டில் பார்த்த பெண்ணின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆவல்கொண்டேன்; கிழவனைக் கூப்பிட்டேன்.

"அந்த வீட்டில் பார்த்தோமே, ஒரு பெண்ணின் படம்! நீகூட அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அழுதாயே! அந்தப் பெண்ணைப்பற்றி ஏதாகிலும் தெரியுமா, உனக்கு?" என்று கேட்டேன்.

"அந்தப் பெண்ணின் படத்தைப் பார்த்துவிட்டு நான் அழவில்லை; எப்படிக் கட்டுப்பாடாக உண்மையை மறைத்து உலகத்தை ஏமாற்றுகிறார்கள், அதையும் உலகம் ஏற்றுக்கொள்கிறதே என்றுதான் நான் அழுதேன்" என்றான் கிழவன்.

இதென்ன திடீர்த் திருப்பமாக இருக்கிறதே என்று நான் எனக்குள் வியந்துகொண்டு, "நீ சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே! அந்தப் பெண்ணைப்பற்றி வீட்டுக்காரர் சொன்னதெல்லாம் பொய்யா? உனக்கு வேறு தகவல்கள் தெரியுமா?" என்று நான் கேட்டேன்.

"எனக்கும் இன்னும் சிலருக்கும்தான் இந்தப் பெண்ணைப்பற்றி உண்மை தெரியும். உண்மையறிந்த சிலரை-அதாவது அந்த வீட்டில் வேலைக்காரர்களாக இருந்தவர்களை-பணம் கொடுத்து வேறு ஊர்களுக்குப் போகச் சொல்லிவிட்டார்கள். என்னை அந்தமாதிரிச் செய்ய முடியவில்லை, நான் அரசாங்க உத்தியோகம் பார்க்கிறவன் ஆதலால்," என்று கிழவன் பெருமையுடன் கூறினான். சுவை மிகுந்த ஒரு கதை கிழவனின் வாயிலிருந்து வரப் போகிறது என்று நினைத்துககொண்டு நான்,

"சரி, கதையை விளக்கமாகச் சொல்ல வேண்டாம், சுருக்கமாகச் சொல்லி முடி, எனக்கு வேலையிருக்கிறது" என்றேன். அப்படிச் சொன்னால்தான் அவன் விளக்கமாகச் சொல்வான் என்பது எனக்குத் தெரியும். "ஐயாவிற்கு எவ்வளவு வேலை இருக்கிறது என்பது எனக்குத் தெரியாதா? அதனால் தானே இவ்வளவு நாளும் ஐயா கேட்காமல் நான் அந்தக் கதையைச் சொல்வதில்லை என்று முடிவு செய்திருந்தேன்" என்று கூறித் தன் மடியிலிருந்த ஒரு பொடி டப்பியை எடுத்து, இரண்டு சிட்டிகைப் பொடியைப் பலத்த ஒலியுடன் உறிஞ்சிவிட்டுக் கதையைச் சொல்லத் தொடங்கினான். அவன் சொன்ன கதையை அப்படியே சொல்லாமல், ஒரு கதைபோலக் கீழே தந்துள்ளேன்.

★

சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர், இந்தப் பகுதியில் குறுநில மன்னர்களைப்போன்ற ஒரு பெரும் பணக்காரக் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்த காலத்தை நோக்கும்போது எத்தகைய நிலையில் மக்களின் பழக்க வழக்கங்களும், மூட நம்பிக்கைகளும் இருந்தன என்பதை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். இந்த வீட்டுக்காரரின் பாட்டனார் ஒருவர் மிகுந்த தெய்வ பக்தியும், ஆசரா, அனுஷ்டானங்களில் நம்பிக்கையும் கொண்டவராக விளங்கினார். அவருடைய மகள்தான் படத்தில் காணப்பட்ட உருவம். படத்திலே பார்க்கும்போதே அவள் மிகச் சிறந்த அழகி என்பதை ஊகிக்கமுடியும். பார்ப்பதற்கு இன்னும் அழகாக இருப்பாள். பெயர் சண்பகம் என்பது. நன்கு வளர்ந்து, திருமணம் செய்து வைக்கும் அளவிற்கு வளர்ச்சியுற்றாள். பெற்றோர்கள் திருமணம் முடிக்க முயற்சிகள் செய்யத் தொடங்கினர்.

சண்பகத்திற்கு உறவின்முறையில் ஒருவர் மணமகனாக நியமிக்கப்பட்டார். நிச்சயதாம்பூலம் நடைபெற்றது கோலாகலமாக. திருமணத்திற்கு நாளும் குறித்தாகிவிட்டது. ஒருநாள் மணமகன் வியாபார நிமித்தமாக வெளியூர் சென்றவர், ஊர் திரும்பவேயில்லை; அகால மரணமடைந்தார். இன்றைய தினம் வரையில் அவரது மரணத்திற்குக் காரணம் தெரியவில்லை. கொள்ளைக்காரர்கள் மிகுந்த காலமாதலால், கொலை செய்யப்பட்டாரா, வழியில் ஏதாவது விபத்து நேரிட்டு, மரணம் அடைந்தாரா, ஆற்றில் குளிக்கப் போகும்போது தவறி விழுந்து உயிர் துறந்தாரா என்பது தெரியவில்லை. மர்மமாகவே இருந்தது அவரது மரணம். சண்பகத்தின் பெற்றோர் அடைந்த துக்கத்தை அளவிட்டு உரைக்கவும் முடியுமா? சண்பகமோ, வாடிப்போன வண்ண மலர்போல் காட்சியளித்தாள். ஊண் குறைந்து, உறக்கம் குறைந்து, உற்சாகம் மறைந்து, உயிருள்ள பிணம்போல் நடமாடி வந்தாள். இப்படி ஒரு சோகம் நடந்திருக்க வேண்டாம் என்றே ஊர் மக்கள் நினைத்தனர். சண்பகத்தின் கவலையைப் போக்க வேறு மாப்பிள்ளையைப் பார்த்துத் திருமணம் செய்து வைப்பதே வழி என்று ஊர் மக்கள் பேசிக் கொண்டார்கள். ஆனால் சண்பகத்தின் குல வழக்கப்படி, நிச்சயதார்த்தம் செய்வதானது, திருமணமே செய்தது போலாகும். ஆகவே திருமணம் செய்து, விதவையானவள் போலவே சண்பகம் நடத்தப்பட்டாள். வேறு திருமணம் செய்து வைக்கும் எண்ணமே அவளது பெற்றோர்களுக்குத் தோன்றவில்லை.

சண்பகத்தின் நிலையை அறிந்த அவளது தாய் தந்தையர், சிறிது காலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைத்தால் அவளது உள்ளம், சூழ்நிலையால் உற்சாகம் பெறக்கூடும், உடல் நலமும் தேறும் என்று நினைத்து அவள் எண்ணத்தைக் கேட்டனர். அவளும் புறப்படுவதற்குத் தயார் என்றாள். சண்பகத்தோடு, அவள் தாயாரும், வேலைக்காரியும் புறப்பட்டு வெளியூர் சென்றார்கள். அங்கே சூழ்நிலை நன்கு அமைந்திருந்தது. பச்சைப் பசேல் என்று மரம், செடி, கொடிகளும், நல்ல காற்றும், உடல் நலத்திற்கு ஏற்றவாறு அமைந்திருந்தன. சண்பகம் சிறிது சிறிதாக உடல் தேறி வந்தாள். தெருவில் நின்று வருவார், போவாரை எல்லாம் பார்த்துக்கொண்டே பொழுதைக் கழித்து வந்தாள். ஒரு நாள் பள்ளிக்கூடம் திறந்த நாள் போலும்-பிள்ளைகள் எல்லாம் ஒழுங்காகப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு, பள்ளிக்குப் போவதைக் கண்டாள். தானும் ஏன் படிக்கக்கூடாது என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது. இது நாள் வரையில் அவள் வீட்டிலேயே ஆசிரியரைக் கொண்டு, தமிழ் படிக்கவும், எழுதவும், கற்றுக்கொண்டாள். அதுகூட அண்மையில் நிறுத்தப்பட்டது. இப்போது பள்ளிக்கூடம் சென்று படிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

தன்னுடைய விருப்பத்தைத் தாயிடம தெரிவித்தாள். தாய் முதலில் தயங்கினாள். இந்த வயதில் வெளியே சென்று படிப்பதா, சமூகம் சும்மா இருக்குமா என்றெல்லாம் கேட்டாள். மகளோ விடவில்லை. என் உள்ளம் மாற, உடல் தேற இதுவே ஒரு வழி, வேறில்லை என்றாள். தாய் யோசித்தாள்; தயங்கித் தயங்கிக் கடைசியில் ஒத்துக்கொண்டாள். சண்பகம் முகம் மலர்ச்சி உற்றாள். பள்ளிக்குச் செல்லத் தொடங்கினாள். எட்டாவது வகுப்பில் சேர்ந்தாள். அவளுக்கு வயது பதின்மூன்றுதானே! எட்டாவது வகுப்பு ஆசிரியர் எழில் வாய்ந்த ஓர் இளைஞர். பார்ப்பதற்கு எளிய தோற்றம் கொண்டவர். ஏழ்மையின் நிழல் முகத்தில் தெரிந்தது; ஆனால் பாடம் சொல்லித் தருவதில் இணையற்ற புகழ்பெற்றவர். சண்பகத்திற்கு அவரிடம் இன்னதென்று கூறமுடியாத ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. அது அவர் பாடம் சொல்லித்தரும் அழகால் ஏற்பட்டதா, அல்லது அவரது இளைய, அழகிய தோற்றத்தில் ஏற்பட்டதா என்று கூறமுடியாது. சண்பகம் அவரோடு நெருங்கிப் பழகத் தொடங்கினாள். அவரும் அவளிடம் நெருங்கிப் பழகினார். காரணம் தெரியாமலே, இருவரும் ஒருவரைஒருவர் மிகவும் நெருங்கிவந்தனர். இப்போதுதான் ஊர் விழித்துக்கொண்டது. இருவரையும் பழிக்கத் தொடங்கியது; இல்லாததும், பொல்லாததும் கூறியது. ஊர் மக்களுக்காக, அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. ஊர் தூற்றத் தொடங்கிய பிறகுதான், அவர்கள் உண்மையிலேயே காதலிக்கத் தொடங்கினர்.

—அடுத்த இதழில் முடியும்—

வெண்பாப் போட்டி

'காய்' என்று தொடங்கிக் 'கனி' என்று முடிக்க வேண்டும்.

காய்த்துப் பழுத்தலினுல் கன்னம் சிவத்தலினுல்
தோய்ச்கு மதுவெனவே தோன்றலினுல்- வாய்வைத்தே,
உண்ண இனித்தலினுல் உள்ளபடி என்வரையில்
கன்னிக்கு நேராம் கனி.

— எழிலூரான், சுந்தராபுரம்.

காய்ச்சியபொன் மேனி !கற்றைக் கார்குழல்! தீம்பலவின்
ஆய்ந்தசுளை மென்அதரம் ! விற்புருவம்- தோய்ந்தமதுக்
கிண்ணத்தில் ஊறும் கனிமுகமும் ! தேர்ந்தவளின்
கண்ணிரண்டும் நாவல் கனி.

— மு. வரதராசன், துறையூர்.

காயென்றேன் இல்லை கனியென்ரு ளப்பேதை
வேயென்றேன் இல்லை வெறுங்கையென்ருள்- தோயென்றேன்
பார்மீதில் நங்கை பதியென்று சாய்ந்தாளே
கார்குழலா ளாமோ கனி.

— பாப்பு-இராமநாதன், பேரையூர்.

காய்மர மாய்நின்ற காரிகை தன்கொவ்வை
வாய்மலர்ந் தென்னை வருகவென்ருள் !- சேய்மையின்
இன்னல்தீர்த் தென்னை இணைந்தவளின் செண்பகக்
கன்னமோ தேமாங் கனி.

— கோ. சோ. ஜெயபால், பொய்கைநல்லூர்.

காய்ந்த நிலவேபோல் கண்களிலே நிற்கின்ருள்
ஆய்ந்த கருத்தை அறைகின்ருள்- ஒய்ந்தஎன்
எண்ணத் திடையில் இனிமையைச் சேர்க்குஞ்செங்
கண்ணி அவளே கனி.

— கோ. வில்வநாதன், தெ. க. பெ-நத்தம்.

காய்அன்ன தீச்செயலைக் கன்னிக்குச் செய்திடினும்
வேய்அன்ன தோளுடையாள் வெம்பாளே !- ஆய்ந்தறிந்தேன்
வில்லொத்த நீள்புருவ வேல்விழியாள் நெஞ்சமுதே
கல்லில்லை நல்ல கனி.

— வீர. முருகேசன், மதுரை.

காய்த்துக் குலுங்கும் கனித்தோட்டம் கன்னியவள்
ஏய்த்துத் திரும்பி எனைக்கொன்ருள் !- பாய்ந்தேநான்
சென்றேன் அருகில் ! சிரித்தாள் முகம்காட்டி !
தின்றேன் திகட்டாக் கனி.

— சி. சிதம்பரம், குடந்தை.

காய்என்ருல் என்ன கசக்குமா ? அத்தகையவள்
வாய்இதழ்கள் தேனை வடிக்காதா ?- போய்அவளை
அள்ளியுண்ணப் போகின்றேன் ! ஆமாம் ! ! எனக்கந்தக்
கள்ளியுடல் கொய்யாக் கனி !

— இரா. அரங்கநாதன், புதுச்சேரி.

காய்ந்த சருகானேன்; கார்வானில் வந்துற்ற
தேய்ந்த மதிபோல் தெளிவற்றேன்- ஆய்ந்துணரா
வன்னெஞ்சம் கொண்டதனுல் வாழ்விழந்தேன்; எல்லார்க்கும்
கன்னிநான் எட்டிக் கனி.

— பா. கிருட்டிணமூர்த்தி, சென்னை-11.

காய்ந்த சருகைக் கசக்கி எறிவதுபோல்
மேய்ந்த எனதுள்ளம் மீறிவிட்டார் !- தீய்ந்திருக்கும்
கண்ணுடையார், மாறும் மனமுடையார், வாழ்நாளில்
காண்பாரோ காதல் கனி !

— "தெருப்பாடகன்"-பம்பாய்-71.

காய்ந்துடலம் வாடிக் கடும்பசியால் அல்லலுற்று
மாயும் படிவறுமை வந்தாலும்- தூயதமிழ்
நற்குடி மங்கையர்தம் நல்லுயிராய்ப் போற்றிடுவர்
கற்பென்னும் பொற்புக் கனி

— பரிமளம், கமுதி.

காய்கின்ருர் தெற்கே; களிகொள் வடநாட்டார்
மேய்கின்ருர் நம்மின் மிகுவளமே- சாய்ந்துவட
வெய்யோர் விலகி விடுதலை நாமடைதல்
கையேந்து நெல்லிக் கனி

— மு. செ. குமாரசாமி, விருதுநகர்.

"காயெல்லா மெட்டியின் காயல்ல கற்ருர்க்குச்
சேயெல்லாஞ் சேயல்ல செப்பிடின்-நோய்தீர்
மரத்திற்கு வாழைக் கனிபோற் கனியா
கருத்திற் கினிய கனி"

— வீ. பரந்தாமன், சென்னை-6.

"காய்சினம் பொங்கிக் கலவார் இகல்விலக்கி
பாய்மாவைக் கொன்றிட்ட பாண்டியன்- வேய்ந்திடும்
மீக்குலம் போற்றும்நல் வேம்பின் கனியன்ருே
காக்கை விரும்பும் கனி"

— கை. சுப்பிரமணியன், கருப்பேரி.

காய்சினத்தை மாற்றும்; கடும்பகையை மாய்த்துவிடும்
தாய்மனத்தில் காணும் துயர்களையும்;- தூய்மனத்துக்
கன்னித் தமிழ்மணக்கும் யாழ்குழலை வெல்லுமிளங்
கன்னல் மழலைக் கனி.

— சா. கா. சாகுல்அமீது, சித்தையன்கோட்டை.

காயனைய இந்திக் கடுங்கோலர் ஆட்சியிலே
தூயதமிழ் தாழ்வுற,நாம் தூங்குவதோ ?- நேயமுடன்
மன்னு தமிழ்காப்போம் ! மன்பதையில் மாண்புறுக !
கன்னித் தமிழாம் கனி.

— நெல்லை. பனை. பழநியப்பன், மேலைச்சிவபுரி.

காயும் கதிர்போல் கவரும் அறிஞரெலாம்
ஒய்ந்திடார் சூழ்நிலை ஒன்றினுல்- மாந்தக்
கசந்திடும் வேம்பில் கனிந்ததென் ருலும்
கசக்குமோ வாழைக் கனி ?

— சாரதி, முதுகுன்றம்.

காய்ந்த இலைசருகைக் கல்லடுப்பில் போட்டெரித்துத்
தீய்ந்திட்ட நொய்யரிசித் தெள்ளமுதம்- சேய்பசிக்கு
நாற்றம் அடித்தாலும் நைந்திட்ட பட்டினியில்
காற்றில் உதிர்ந்த கனி.

— தென்றல் இராமலிங்கம், சென்னை-8

காய்கதிரோன் இல்லைஎனில் கண்கவரும் தண்ணறவில்
தோய்மதிதான் விண்ணிடையில் தோன்றிடுமோ ? காரின்றேல்
பாய்புனல்தான் ஓடிடுமோ ? பாலின்றேல் மோரேது ?
காய் இன்றேல் ஏது கனி.

— சொ. சண்முகம், மேலைச்சிவபுரி.

காய்போலத் தோன்றும் கரம்பட்டால் முட்குத்தும்
தாய்போலக் காக்கும் தடித்ததோல்-வாய்மணக்கும்
நல்விருந்திற் கண்டிடலாம் நற்பெருமை வாய்ந்தஇதைச்
சொல்லிடுவீர் என்ன கனி ?

— எ. எ. தவசிலிங்கம், ஈரோடு.

காய்ந்தாற் கவினூறும்; காலந் தனைக்காட்டிச்
சாய்ந்தாற் கொழுஞ்சுவை சாருமாம்-ஒய்ந்தால்
விடலிற் பெரும்புவியே வீழுமாம்; நாளுங்
கடலிற் பழுக்குங் கனி.

— குழ. எழிலியரசன், காரைக்குடி-3.

காய்தலைப் போக்கும்; கனிவான செவ்விதழால்
ஒய்வில்லா முத்தம் உவந்தளிக்கும்;-வாயாம்
குமுதத்தாற் செந்தேனைக் கொட்டி நகுமே,
அமுதான பிள்ளைக் கனி.

— பனசை, சு. சடையப்பன், சென்னை-15.

காயும் நெருப்பாற் கமழும் புகைபொறுத்து
வாயும் மணக்க வடித்தெடுத்த-தாயின்
அடுகறிக் கீடோ அதிகமான் பெற்ற
கடுமிசை நெல்லிக் கனி.

— செ. ஞானபூபதி, காரைக்குடி-3.

காய்தல் அகற்றிக் கசடறக் கற்ருேர்கள்
ஆய்தல் எதையும் அறிவுடைமை-ஆய்தொடிஇ
வாஞ்சை மிகினும் வறிஞன் விரும்புவனே
காஞ்சிரை அன்ன கனி.

— ஜெ. வேணுகானன், சென்னை-1.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.